வெளியீடு இல:—29.

# இரணிய

## சம்ஹார அம்மானை



ஆக்கியோன்;—

வரகவி மாறன் விதானை.

பதிப்பாசிரியர்;—

க.தா. செல்வராசகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ERANYA SAMHARA AMMANI

வெளியீடு இல: 29.

கிழக்கிலங்கை செட்டிபாளையம்
வரகவி மாறன் விதானை இயற்றிய

# இரணியசம்ஹார அம்மானை.

## (Eranya Samhara Ammani.)

பதிப்பாசிரியர்:—

### க. தா. செல்வராசகோபால்.

275536

275536

VIJAYALUCKSHMI BOOK DEPOT
BOOK SELLERS & STATIONERS
248, GALLE ROAD
WELLAWATTE
Colombo-6.
Phone: 83830.

பதிப்பகம்: —

ஜீவா பதிப்பகம்.

பிரதான வீதி, — தேற்றாத்தீவு
களுவாஞ்சிகுடி (த. நீ) இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகள் 1000.
1966.

(பதிப்புரிமை பதிப்பகத்தாருக்கு)

Printed at
**Manohara Printers.**
Main Road, — Thetativu.
Kaluwanchikudi. (P O)
(Ceylon.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம் . .

இந்த நூல் ஆசிரியர் வரலாற்றை
ஓரளவு அறிய உதவியவரும்,
கதிர்காம சதகம்,
கதிர்காமத்தம்மானை முதலிய பல
நூல்களின் ஆசிரியருமான

பரமனடி எய்திய
செட்டிபாளையம்

புலவர்.

இ. வ. கணபதிப்பிள்ளை

அவர்கட்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தமிழ் மன்ற ஸ்தாபகரும்,
கிழக்கிலங்கை எழுத்தாளர் மன்ற இயக்குநரும்,
''வாழையடி வாழை'' மரபு நூலாசிரியருமான,

# பழுகாமம் - வித்துவான்.
# க. செபரெத்தினம். B. A. அவர்கள்

உவந்தளித்த

# அணிந்துரை.

மனித சமுதாயமானது பகுத்தறிவு என்று கூறி நாஸ்திகவாதத்திலும், கலை என்று மயங்கி சினிமா மோகத்திலும் நாகரிகம் என்று நினைத்து அரை நிர்வாண கோலத்திலும் உழன்று அதலபாதாளத்துள் விழுந்திட நடை போடுகிறது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்னும் உண்மையினைச் சிற்றறிவு படைத்த மனிதன் மும்மலப் பீடிப்பால் மறந்துவிடுவதோடு, நின்றும் இருந்தும் கிடந்தும் தன் தலைவனை வழிபடுவதற்கும் பதிலாகத் தன்னையும் தன் உடமைகளையும் வழிபடும் இழி நிலையினையும் நாம் காண்கிறோம்.

அழிவு நிலையிலிருந்து மனிதகுலத்தைக் காத்திடும் சக்தி அருளாளனாகிய இறைவனுக்கு மட்டுமே உண்டு. மனிதனின் பழைய சுபாவங்களை அழித்து அவனை முழுவதும் புதிய சிருட்டி ஆக்கும் வல்லமை சர்வவல்லமை நிறைந்தவரும் சகல காரியங்களையும் அறிந்தவரும் சதா காலங்களிலும் இருப்பவருமான இறைவனுக்கே உண்டு.

இரணியனது வரலாறு இதனைத் தெளிவாக உணர்த்துகிறது. மாயையில் மூழ்கிய இரணியன், ஞான ஒளி பெற்றிட, அழிந்திட வேண்டியவனானான். மரணவேளையிலேயே அவனது மயக்கம் தெளிந்தது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம், கம்பராமாயணம், நரசிங்கபுராணம், இரணிய வதைப்பரணி முதலிய பல நூல்களில் கூறப்பட்ட இரணியனது வரலாற்றைக் கற்றறிந்த வல்லோரும் கல்லாத பாமரரும் பாடிச் சுவைத்திடத்தக்க வகையில் அனைவருக்கும் ஏற்ற நடையிலும் சந்தத்திலும் ''இரணிய சம்ஹார அம்மானை'' என்னும் நூலினை, செட்டிபாளையம் வரகவி மாறன் விதானை அவர்கள் ஆக்கி உதவியுள்ளார்கள்.

வரகவி அவர்களது அம்மானை நடையானது தூய்மையும், எளிமையும் மிக்கதாய் அமைந்திருப்பதோடு, பாடுந்தொறும், பாடுந்தொறும் இன்பம் பயப்பதாயும் விளங்குகிறது. நம் உள்ளம் களிக்க தெள்ளிய நடையில் அம்மானையினை ஆக்கித்தந்துள்ள வரகவியவர்களது ஆற்றல் பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

செய்யுள் இலக்கணத்தைப் பொறுத்த வரையில் சிலபல விகாரங்கள் காணக்கிடந்தபோதிலும் வரகவி அவர்களது அருட் பாவன்மையினால் அவ்விகாரங்கள் தாமும் பெருங்குறைகளாகக் காணப்படவில்லை. பாடிச் சுவைப்பதோடு, உணர்வடைவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ள இந்நூலானது பக்திமார்க்கத்தினைப் பரப்பிடப் பெரிதும் உதவிட வல்லதாகும்.

கிழக்கிலங்கையின் பாரம்பரியமான கலைச்செல்வங்கள் பல தேடுவாரற்று செல்லரித்து அழிந்தொழிந்து மறைந்து கொண்டிருக்கும் இக்காலையில், வரகவி அவர்களது அம்மானையை அதன் இன்றைய தேவையை உணர்ந்து, மிக்க சிரமங்களின் மத்தியில் பதிப்பித்து தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அறிந்திட வழிவகுத்துத்தந்த பரோபகாரி திரு. க. தா. செல்வராஜகோபால் அவர்களது சீரியபணி எல்லாராலும் வரவேற்கத்தக்க சிறந்த தொண்டாகும். இத்தகையதொண்டினை அவர்கள் தொடர்ந்து செய்திட எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறோம்.

பழுகாமம். க. செபரெத்தினம்.
பெரியபோரதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதைந்த ஏட்டுப் பிரதியை
ஓரளவு திருத்திப் புதுக்கியமைத்து
இந்நூலை ஆக்கி அதிகாரம்
வகுத்துதவிய
தமிழ்த்தலைமை ஆசிரியர்,
இலங்கை வானொலிக் கலைஞன்,
கலைக்கழக உறுப்பினர் என்னும்
பதவிகளில் சிறப்புற்றவரும்,
பல நாடகங்களின் ஆசிரியருமான
செட்டிபாளையத்தைத்
தாயகமாகக் கொண்ட
குருமண்வெளி

**திரு. S. E. கணபதிப்பிள்ளை**
**ஆசிரியர் அவர்கள்.**

தோற்றம்: 9—9—1905.
மறைவு: 8—10—1964.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிப்பகத்தாருரை.

அன்புடைய வாசகர்களே,

எங்களது பதிப்பகத்தால் வெளியிடும் நூல்களை அமோகமாக ஆதரித்து வரும் உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள். உங்களின் ஆதரவுதான் செல்லரித்துக் குறைவுற்ற ஒரு ஏட்டுப்பிரதியினை நூலுருவாக்கி வெளியிடும் முயற்சியில் எங்களை ஊக்குவித்தது எனின் குறைவாகாது.

19ம் நூற்றாண்டில் எழுந்த இந்நூல் அம்மானைகளுள் ஓர் சிறந்த அமைப்புடையதாக இருந்தாலும் இதனை இற்றை வரை தமிழுலகு அறியாது இலை மறை காய்போல் ஒரு சிலரால் மாத்திரம் அறிந்ததாக இருந்தது. இக் குறை இப்பதிப்பினால் தீரும் என நம்புகின்றோம்.

வாசகர்களாகிய உங்களிடத்தில் வேறு ஏட்டுப் பிரதிகளிருப்பின் அவற்றுடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்து குறைவுள்ள இடங்களை அத்தாட்சியுடன் அறிவித்தால் மறு பதிப்பில் திருத்தி பதிப்பிப்போம். அது நீங்கள் நம் தமிழன்னைக்கு உதவும் பெருமுயற்சியாகவும் இருக்கும்.

உங்கள் ஆதரவு மேலும் பல நூல்களை வெளியிட எங்களை ஊக்க எல்லாம் வல்லபரம் பொருளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
நா.சா. கதிர்காமத்தம்பி.
உரிமையாளர்.

தேற்றாத்தீவு.
களுவாஞ்சிகுடி P O.
10.12.66.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.9.1959ல் இலங்கை வானொலியில்
இந்நூல் பதிப்பாசிரியர்

# திரு க.தா.செல்வராசகோபால் அவர்கள்

**இரணிய சம்ஹார அம்மானை என்ற தலைப்பில்**
**பேசியபோது முன்னுரையாகக் கூறியவை**

---

முன்னும் பின்னும் செல்லரித்து விட எஞ்சியிருந்த 25 ஓலை இதழ் கொண்டதொரு ஏட்டுச்சுவடி. எண்ணெய் பிடித்து அழுகு மடிந்து அருப நிலையில் மிளிரும் எழுத்துகள் கொண்ட கொப்பி புஸ்தகம். பல் விழுந்து பார்வை மயங்கி பழுத்த தசைகொண்ட இரு பெரியவர்கள். இத்தனை கர்த்தாக்களுமில்லாவிடில் இந்த அருமையான காவியத்தை நாம் காணக்கிடையாதவர்களாகிவிடுவோம்.

ஏறக்குறைய ஐந்து வாரங்கள் அவஸ்தைப்பட்டு ஏட்டுச் சுவடியில் சில, எழுத்துப் பிரதியில் காப்பு, இரு வயோதிபரின் வாக்கில் மங்களம் எனத் திரட்டி எடுத்த காவியமாகிய இது வேறொரு அபூர்வமான கதையல்ல. எல்லாருக்கும் அறிமுகமான ''இரணியன் வதமே.''

எல்லாருக்கும் அறிமுகமானதென்று ஏன் கூறுகிறேன் என்றால் கல்லாத பாட்டிமார்கள் அந்தி மயங்கும் நேரத்தை இரணியன் பட்டநேரமென்று சாதாரணமாக அழைப்பதுண்டு. படிப்பு வாசனை இல்லாத கிராமப் புறங்களில் கூட இது பழக்கத்திலிருக்கும் வழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணியன் அழிவைப்பெற்ற நேரம் அந்தி நேரமாம். ஏனெனில் அவன் "இரவிலோ பகலிலோ உதயம் மதியத்திலோ என்னுயிரை கவராதவாறு வரமீகுக" என பரமனைவேண்டியருள் பெற்ருனும். ஆனல் அந்தி மயங்கும் நேரத்தை மறந்துவிட்டான். ஆகவே அந்த நேரம் அவனுக்கு அழிவை கொணர்ந்தது இதனல் அந்த நேரத்தை இரணியன் பட்ட நேரம் என்பது வழக்கு.

இன்னும் காட்டிலோ நாட்டிலே கடலிலோ வானிலோ கடு மரிய பாதாளத்திலோ வீட்டிலோ வெளியிலோ எனக்கு மரணம் அணுகக் கூடாதென வரம் கேட்டுப் பெற்றுக் கொண்டான. இதெல்லாம் கடந்த வாசற்படி அவனுக்கு எமனுலகாக அமைந்தது.

இக்காரணங்களாலேதான் யாவரையும் வாசல் படியில் இருக்க விடமாட்டார்கள் பாட்டிமார். அந்தி மயங்கும நேரத்தில் உணவு கொடுக்க மறுப்பார்கள் தாய்மார். இவ்வளவு பிரபல்யமான இந்தக் கதையினைக் கூறுவதுதான் இரணிய சம்ஹாரமெனும் காவியம். இதைப் பாடியவர் "வரகவி மாறன் விதானே" என்பது ஏட்டுப் பிரதி மூலம் கிடைக்கிறது. செட்டிபாளையமெனும் கிராமத்தில் இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன் சீவித்தவர் எனச் சில முதியோர்கள் கூறுகிருர்கள். எனவே இது 19 நூற்ருண்டு இலக்கமேதான். இனி நூலுள் நுழைவோம்.

# என்னுரை . . .



நாத்திகமும் கம்யூனிசமும் பரவியுள்ள இக் காலத்தில் எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவானதும், ''கடவுள் இல்லை'' என்ற வாதத்திற்கு சாட்டை கொடுப்பதுமான இந்த ''இரணிய சம்ஹாரம்'' எனும் நூல் மிகவும் பிரயோசனம் பயப்பதொன்றாகும் என்ற துணிபுடன் இதன் பதிப்பாசிரியனானேன்.

இந்நூல் ஒரு செல்லரித்த ஏட்டுப் பிரதியின் புத்தக ரூபமே தவிர வேறன்று, எனினும் செல்லரித்த இடங்களில் சிதைந்திருந்த சொற்களை முன்னுக்குப் பின் ஆய்ந்து இவ்விடத்துக்கிதைந்தது இதுவாக இருக்கலாமெனத் துணிந்து அம்மானையை முற்றாக்கித் தந்தவர் காலஞ் சென்ற எனது தாய் மாமனாரும் இலங்கை வானொலிக் கலைஞன், கலைக் கழக உறுப்பினன், நாடக ஆசிரியன் எனப் பல துறையில் புகழ் பெற்ற தமிழ்த் தலைமை ஆசிரியர் திரு.S.E. கணபதிப்பிள்ளையவர்களாகும். அஃதுமட்டுமல்ல இதனைப் புத்தக ரூபமாக்கவேண்டுமென விழைந்து கையெழுத்துப் பிரதியளவிலே கண்டு இறைவனடி சேர்ந்தவருமாவர்.

ஏட்டுப் பிரதியின் ஆரம்பமும், முதலும் கிடைத்தில இதற்கிணையாக ஒரு கொப்பிப்புத்தகம் அகப்பட்டது. இரண்டுக்கும் சில இடங்களில் அற்பமான வேறுபாடுகள் காணப்பட்டன. இதிலிருந்து ஏட்டுப்பிரதியின் உண்மையான பிரதிதான் கொப்பிப்புத்தகம் எனத் துணிந்தேன். அக் கொப்பிப் புத்தகத்தின் ஆரம்பத்தில் ''திருவளர் செட்டி நகருறை கண்ணகி திருவருள் பெற்று வசைக் கவி பாடும் திறன் மிகுந்த குரு துணை மறவா மாறன் விதானை பாடிய இரணிய சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹார அம்மானை'' எனத் தொடங்குகிறது. ஈற்றில் செட்டி பாளையம் பிள்ளையார் கோவிற் பூசகர் பொலிஸ் தலைமை சீனித்தம்பி யால் கலியுகம் 5027 துந்துபி வருடம் தைப்பூசத்தன்று எழுதி முடித்தது. இவைதான் இந்நூல் பற்றி அறியக் கிடப்பது. இது பற்றி ஆய்வுரையில் காண்பேர்.

இவ் அம்மானையை நான் முதலில் இலங்கை வானொலியில் 13.12.59ந் தினத்தில் ஒலிபரப்பினேன். அதன் பின் இந் நூலை புத்தக ரூபத்தில் கொண்டுவரவேண்டுமென விரும்பினேன் எல்லாச் சமய வரப்புகளையும் கடந்து நிற்கும்; நாத்திக வாத வெற்றி நூலான இதனை வெளியிடும் தருணம் கைவரப்பெற்ற இக்காலை மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

---

## ஆசிரியர் வரலாறு.

கலியுக சகாப்தம் 5027 துந்துபி (1922) வருடம் தைப் பூசத்தன்று எழுதி முடித்தது என கையெழுத்துப் பிரதி கூறுவதால் இதன் ஏட்டுப்பிரதி ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முதலாவது எழுதப் பட்டிருக்க வேண்டும். மாறன் விதானை என அழைக்கப்பட்டிருபபதால் இலங்கையில் கிராமத் தலைமை முறை ஆரம்பமான காலத்தின் பின் தான் இந்நூல் பாடப் பட்டிருக்கலாமெனத் துணியலாம்.

இந்நூலாசிரியர் பற்றிய விபரங்களை அறியக்கூடிய அளவு அத்தாட்சிகள் கிடைத்தில. இக் கிராமத்தில் வாழ்ந்த கதிர்காமசதகம் பாடிய கணபதிப்பிள்ளைப் புலவர், வரகவியாகத் திகழ்ந்த சின்னவப்புலவர் என்னுமிருவரிடமும் விசாரித்தறிந்த சில விபரங்களை இங்கு தருகிறேன். இவர் வசை பாடுவதில் புலி. செட்டிபாளையத்தில் கிராமத் தலைவனாக இருந்தவர். அடக்கியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் திறன் வாய்ந்தவர் கிராமத் தலைமை முறை ஆரம்ப மான காலத்தில் (விதானையாக) கிராமத்தலைமையாக நியமனம் பெற்றவர். செட்டிபாளையத்தில் திண்ணைப்பள்ளிக்கூடம் நடாத் திய கூழன் வாத்தியார் என்பவருடைய கல்வித் தோழர். இவரு டைய வசைக்கவிக்குப் பயந்து கள்வர் களவெடுக்கப் பயந்தனர். குற்றம் புரிந்தோர் அதனை மறைக்கப் பயந்தனர் என்பர். கரி நாக்கு வாய்ந்த இவர் வசைபபாடல்கள் பாடியவுடனே பலன் தரத் தக்கவை. இவர் வேறு நூல்கள் பாடியதாகத் தெரியவில்லை.

---

## இட வரலாறு.

இவ்வாசிரியர் பிறந்த இடம் செட்டிபாளையம் என் றேன். இஃது கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு நகரத்திலிருந்து 12 கல் தொலைவிலுள்ள ஒரு சிறு கிராமம். இங்கு இவரை விட ஈழநாடெங்கும் இந்நூற்றூண்டின் புலவரென அன்பாய் அழைக்கப் பட்ட கணபதிப்பிள்ளைப்புலவர் [இவரியற்றிய நூல்கள் கதிர்காம அம்மானை, கதிர்காம சதகம், தில்லை மண்டூர்த் திருப்பதிகம், இன்னும் பல இரங்கற்பாடல்கள் இவை யாவும் நூலாக வெளி வந்துள்ளன.] வரகவி சின்னவப்புலவர் [பெருங்காற்று, பெரு வெள்ள அம்மானை, கலிகாலமோசடி, கலிகாலக்கூத்து, பாரப்பா எனும் சிறு நூல்கள் புத்தக ரூபத்திலுள்ளன. மேலும் நூற்றுக் கணக்கான. சந்தர்ப்பத்திற்கேற்ற கவிதைகளை அச்சிட்டு வெளி யிட்டுள்ளார்.] சீ.எ.கணபதிப்பிள்ளை தலைமை ஆசிரியர் [கீசகன் வதம், அலங்கார ரூபன் நாடகம் என்பவற்றின் பதிப்புத் துணை ஆசிரியர் பல வடமோடி, தென்மோடி நாடகங்களின் ஆசிரியர்.] என்பவர்கள் பிறந்து பெரும் புகழுடன் வாழ்ந்துள்ளார்கள். அஃது மட்டுமல்ல தமிழர் வாழிடமெல்லாம் இவரையறியாரிலர். எனத் துணிந்து கூறக்கூடியதான தமிழ் மன்னன் புலவர்மணி. ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களும். இவ்வூர் எல்லைக்கோட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபாலில் வசிப்பவரே. இஃதுமட்டுமல்ல இன்றுகூட முப்பாஷை அறிந்த பல இளைஞர்கள் கல்வியால் உயர்ந்து ஏனைய கிராமங்களுக்கு ஒளி விளக்காகத் திகழுகிறார்கள். இத்தகைய கல்வி மணம் வீசும் கிராமமே இவரது உறைவிடமாகும்.

---

# நூல் வரலாறு.

இரணிய சம்காரத்தைப் பற்றிய சம்பவம் பாகவதத்தில் திருமாலின் தச அவதாரங்களுள் ஒன்று. சேர நாட்டினர் இச் சம்பவத்தை தம்மொழியில் செஞ்சுலட்சுமி மகாத்மியம் என்ற நூலால் பாடிப் போற்றுவர். நரசிங்கபுராணத்தில் விரிவாக இரணிய வதம் கூறபபட்டுள்ளது, அது மட்டுமல்ல கம்ப இராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் இரணிய வதமென்ற ஒரு படலத்தில் இரணியனின் சரித்திரம் விரிவாகக் கூறப்படுகிறது. சீதையை விடுவிக்க மறுத்து யுத்தசன்னதனான இராவணனுக்கு விபீடணனால் எடுத்துக்காட்டாக இச்சரித்திரம் கூறப்படுவதாக கம்பரின் கவிகளால் அறியக்கிடக்கின்றது.

176 செய்யுள்களில் கம்பர் இராமாயணம் கூறும் சரிதத்திற்கும் இவ்வம்மானை கூறும் சரிதத்திற்கும் அவ்வளவு கதைச் செலவில் அதிக வேறுபாடில்லை எனினும் எடுத்துக் கூறும் முறை இயைத்துக் கூறும் முறை என்பவற்றில் பல வேறுபாடுகள் உள்ளன.

வடமொழிப் பாரதத்திலும் திருமாலின் அவதாரங்களை, கிருஷ்ணரைப் போற்றும் இடங்களில் இச் சம்பவம் நுழைக்கப்பட்டுள்ளது. இரணிய வதைப் பரணி, என்று ஒன்றும் உளது

இரணியனை இரணியகசிபு என்பர். (தவம் புரிந்து இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயை பெற்று சாகாவரம் பெற்றேரைக் கசிபு என்பர்.) இரணி யாக்கன் என்பது இவனது தம்பி. இருவரும் காசிபமுனிவருக்கும் திதிக்கும் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள். இரணியாக்கனை பன்றி யுருக் கொண்டு (வராக அவதாரம்) திருமால் கொன்ற பகையினு லே திருமாலை இரணியன் வெறுத்தான் என நரசிங்க புராணம் கூறும். இவனது மனைவி லீலாவதி. இவர்களுடைய அருமைக்குழந் தைதான் பிரகலாதனன். நரசிங்க அவதாரத்தின் போது நிலமக ளுடன் கூடிப் பிறந்தவன் நரகாசூரன் என்பவன். இரணியன் என்ற சொல் தமிழகம் சங்க காலமிருந்தே அறிந்த ஒரு சொல். சங்க நூலுள் தலையான பத்துப் பாட்டுள் ஒன்முன மலைபடுகடாம் (கூத்தராற்றுப் படை) பாடிய புலவர் இரணிய முட்டத்துப்பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகஞர் என அழைக்கப்பட்டார். இதிலி ருந்து இரணிய வதம் சங்ககாலத்துக்குமுற்பட்ட ஒரு நிகழ்ச்சியா குமெனத் துணியலாம். இரணியனின் வதை நேர்ந்தவிடத்தை அக்கால மக்கள் அவன் பெயரிட்டழைத்தனர் என்றும் அவ்வூரில் பிறந்து திகழ்ந்த புலவரை இவ்வாறழைத்தனர் என்றும் துணிவ தில் தவறின்று.

மேலும் தமிழ்நாட்டில் திருமுனைப்பாடி நாட்டின் அர சனுகவிருந்த சிவனடியார் ஒருவர் நரசிங்கமுனைப்பாடி நாயனுர் என அழைக்கப்படுகின்ருர். நரசிங்கர் என்பது இவர் இயற்பெயர். இவை களைக் கொண்டு தமிழ் நாட்டிற்கும் இரணிய வதத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்கின்றதென்பதில் அது வைணவம் பரவ முதலே இங்கு நிலைத்துள்ளதென்பதும் அறியலாகும்.

தென்னுட்டவரை (திராவிடரை அல்லது மறத் தமிழ ரை) அசுரர் என வடநாட்டார் அழைத்தனர் என்பதனை வாதமா கக் கொள்வோர் இவ்வித நியாயங்களைத் தம் பக்கத்துக்கு உறு துணையாகக் கொண்டு சுரர் (மதுவுண்போர்) அசுரர் (மதுவருந்தா தோர்) எனக்கருத்தெடுத்து இராவணன் போன்ருேர் மாந்தருள் வலிமை சார்ந்தவர் என்றும் அவர் தம் மதிவலிக்கும் உடல் வலிக் கும் வடநாட்டவர் பயந்தனர் என்றும் கூறுவர். தென்னுடுடைய சிவனை, என்னுட்டவர்க்கும் இறைவனை, வணங்கும் திராவிடர் கொள்கைக்குமுரணுன வைணவத்தை இங்கு நுழைத்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இத்தகைய எதிர்ப்புகள் ஏற்பட்டனவென்றும் சாற்றுவார்.

இரணியவதம் ஒரு சமயப்போராட்டம். இரணியம் என்றால் பிரமவாதம். அதாவது உற்பத்தியிறையை வணங்கும் ஒரு கொள்கை. இவற்றிலிருந்து இரணிய சம்ஹாரம் தென்னாட்டுச் சமயமொன்றிற்கும் வைணவத்திற்கும் நடந்த போராட்டமெனவுந் துணியலாம். வைணவத்தின் வெற்றிக்காவியமெனவும் கூறலாம்'

தற்காலத்து நூல்களிலொன்றான பாரதிதாசன் எழுதிய 'இரணியன்' எனும் நாடகத்தில் இரணியன் தென்னாட்டவன், திராவிடன் எனவும் அவனை. வஞ்சித்து பிரகலாதனன் உதவி கொண்டு திருமால் கொன்றார் எனவும் கூறப்படுகிறது.

அகில இந்திய வானொலியில் "இறை அணியன்" என்னும் நாடகத்தில் திருமால் நரசிங்க அவதாரமெடுத்து இரணியனை நகத்தால் கிழித்து குடரெடுத்து மாலையிட்டபோது இறைவனே! நீர் என் தசைப்பிண்டத்துள் அதிமோசமானதும் சகல பாவங்களுக்கும் காரணமாயிருப்பதுமான இக்குடலை எடுத்து உன் மார்பில் அணிந்து என்னை ஆட்கொண்டீரே! நான் இனி இறை அணியன் ஆனேன். என இரணியன் கூறியதாகக் கூறும் ஒரு கட்டம் இந்த நூல் வரலாற்றுக்குச் சுவை கூட்டுமென நம்புகின்றேன்.

இது எவ்வாறாக இருப்பினும் நான் முன்னர் கூறியது போல் இது பல சமயத்தவரும் "கடவுள் ஒருவருண்டு அவருக்கு அவருடைய சிருஷ்டிகளில் எதுவும் நிகரில்லை நிக்ரகவும் முடியாது." என்ற உண்மையை எடுத்துக்காட்டும் நூல் இது என்பதே கிறிஸ்தவனாகிய என்னை இந்நூலைப் பதிப்பிக்கும் முயற்சியில் தூண்டிற்று. கடவுள் இல்லை என்று வாதித்த ஒரு சைவ வாலிபனுக்கு ஒரு கிறிஸ்தவ போதகர் உதாரணமாக இக்கதையைக் கூறிய சம்பவம் என் ஞாபகத்துக்கு வருகிறது. ஆகவே தான் இந்த நூலை இலக்கியம் சமயம் என்ற இரு முனைகளில் நின்று ஆராயாது, இதனால் நாத்திகம் பரவி வரும் காலத்தில் பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு இறையை மறைக்க

மறுக்க முயலும் உள்ளத்தினர்க்குப் பொருந்திய ஒரு காலத்துக்கேற்ற ஔடத நூலாகக் கொண்டு பதிப்பிக்கின்றேன்.

இந் நூற் கருத்து வைணவக் கருத்தாக இருந்தாலும் கருப்பொருள் எல்லா மதத்தினருக்கும் ஒப்புவதொன்று. எனவே தான் யாவரும் சமய விரோதமின்றி இதனை அணுகும் வண்ணம் இதனை எவ்வித சமயச்' சித்திரங்களுமின்றி பொது நூலாக வெளியிடுகிறேம்.

காப்புகளும், மால்—அரி, நாரயணு எனும் நாமங்களும் இறைவனையே குறிக்கின்றதென்ற பரந்த மனப்பான்மை ஏற்பட்டால் மத்திய ஆபிரிக்காவில் வசிக்குமொரு இருளனுக்கும் இந் நூல் பயனளிப்பதொன்ருகும்.

---

# நூலாராய்வு.

இது ஒரு அம்மானை நூல். ஆனல் இதன் யாப்பு முறைமை ஏனைய அம்மானைகளுடன் ஒப்பிடும் போது சற்று வித்தியாச அமைப்புடையது. இது விருத்தப்பாக்களின் அமைப்புடையதாக தொடர்ந்து நாலு அடிகளின் எதுகை ஒன்றுபட்டதாக இருக்கின்றது. ஒரு வேளை நாலடிச் செய்யுள்களாலான ஒரு நூலை அம்மானை ஆக்கினரோ என ஐயுறவும் இடமுண்டு.

காப்புத் துதிகளாக வரும் வெண்பாக்களிலும் அம்மானையடிகளாக வரும் அகவலடிகளிலும் பாவிவரும் வழுக்களை கவனிக்கும்போது இந் நூலாசிரியருக்கு யாப்பு அறிவில்லையெனத் துணிந்தாலும் கவிகளில் வரும் சொல்நயம், பொருள்நயம் என்பவற்றைக் கவனிக்கும்போது இயற்கையிலே புலமை வாய்ந்தவரெனக் காணலாம். காப்புச் செய்யுள்களில் வரும் 'முகத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கை தொட்டுக் கை கூப்பி' 'கவிதைகளில் அல்லாதன அகலச் செய்' 'விதியைப் பதமெடுத்து வீழ்த்தியவா' 'அம் மையே மம்மர் தீர் அம்மையே' 'திங்குழலில் ..... தீந்தமிழை .........ஈந்தவனே' என்னும் சொற்றொடர்களில் வரும் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் மாட்சிமை பெரியது.

இனி நூலை பண்டை மரபு தவறாதபடி கதை ரூபமாகப் பக்தர்களுக்கு ஒரு முனிவர் கூறியதாகக் கூறும் உத்தியில் கூட ஒரு வேறு புது யுக்தியைக் கையாண்டு இருக்கிறார். இந் நூலாசிரி யர் காலத்தில் பயின்று வந்த பாரதம், ராமாயணம, புராணங் கள் போன்ற பல நூல்களின் சாறெடுத்து நாட்டுச் சிறப்பு நகர்ச் சிறப்பை தன் கற்பனை மெருகேற்றிப் பாடியுள்ளார். தாழப்பறந்திட கோபுரங்கள் தடையென ஆலா [பறவை] நீமீ ழாத கவலையுடன் மேலும் மேலும் உயருமென இவா உயர்வு நவிற்சியில் கூறுவதும் ஓர் சோகமயமான காட்சியைக் காட்டி உயர்விப்பதும் கற்பனையின் சிகரத்தையும காவிய உணர்ச்சிக் கிளர்வலைகளின் கரையையும் தட்டுகிறது.

இதே நிகழ்ச்சியை கம்பர் இராமாயணம் அயோத் தியாகாண்டத்தின் இரணிய வதைப்படலமென்றொரு பகுதியில் நயம்படப் பாடியுள்ளார். வால்மீகியின் காவியத்தின் சாரத்தை அக்காலத்தமிழகத்தின் தேவைக்கேற்ப கம்பர் பாடினூர் என்றால் கம்பர் தந்த கவிதைக்காவினை இவர் இக்காலத் தமிழகத்தின் தேவைக்கேற்ப விரித்துப் பாடினரே என்றதிசயிக்கத் தோன்று கிறது. அத்தகைய விரிவு இந் நூலில் காணப்படுகிறது. 704 அடிகளில் கம்பர் பாடிய சரிதம் இந் நூலில் ஏறக்குறைய 1500 அடிகளில் விரிவு பெறுகிறது. இரு நூலையும் ஒப்பிடுவார்க்கு இரு நூலிடையுமுள்ள பெரு வேற்றுமை புலனாகும். தேவர்கள் முறையிடல், இந்திரன் பிரகலாதனூதல் எனும் நிகழ்ச்சிகள் இந் நூலாசிரியர் புதிதாகக் கையாண்டுள்ள நிகழ்ச்சிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுக்கு இருக்கவேண்டிய வலிமைகள் எவையென அறியவேண்டுமா? தோள்வலிமை எனத் தொடங்கி பதினறு வித வலிமைகளைப் புலவர் கூறும் போது, இவரை ஒரு அரசியல் சாத்திர சாம்பவான் என்றே கூறத்தோன்றுகிறது. ''அல்லாவைத் தொழுகும் அலியாரும், சிவனடியை நல்லாக வணங்கும் நம்பியும் ஒன்ருக'' என்பதினுல் ஒரு நாட்டில் குடிகளுள் ஒற்றுமை எப்படியாக இருக்கவேண்டுமென எடுத்துக் காட்டுகிருர். எல்லாம் கைகூடின் மமதை தானுகவே உண்டாகும் என்பதனை இரணியன் நாடு திரும்பியபின் ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் மிக எளிதாக எடுத்துக்காட்டுகிருர். திருமாலை வைவதுபோல் இரணியனுடைய வார்த்தைகளாலே திருமாலைப்போற்றுமிடங்கள் சொல் ஆட்சியின் திறத்தை எடுத்துக்காட்டுகின்றன. ''எலுமபுகளை நொருக்கி எருக்கிலைக்கு உரமிடுவேன்'' என்னும் அடிகளால் இரணியன் இறைவணக்கத்தை எவ்வளவு பிரயோசனமற்றதாக நினைக்கிருன் என்பதை இப்புலவர் எடுத்துக் காட்டும் வண்ணம் மெச்சற்குரியது. அபபடிப்பட்டவனை இறைவன் என்று சொல்வது எப்படிப்பட்டதென கூறுகின்ருர் தெரியுமா? மூளிக்கலங்காரம், முடவனுக்குத் தங்கப் பாதரசம், கோரைப் புல்லுக்கு வைரப்பேர், அலிக்கு வீரக்கழல், கள்ளிக்கு தேவதாரு என்று ஒப்புவமை கூறி இகழ்வது மறக்கமுடியாததொன்று.

அது மட்டுமல்ல இரணியனின் வீட்டில் ஏற்படும் நிகழ்ச்சிகளைத் தரும்போது சாதாரணமாக ஒருவீட்டில் நடக்கும் நாளாந்தரச் சண்டை போல் வடித்துத் தரும் காட்சி சுவைக்கச் சுவைக்க இன்பம் பயப்பதாகும். பிரகலாதனின் பிறப்பை எடுத்துக் கூறுமிடம் திண்ணைப்பள்ளிக்கூடத்துக் காலத்திலிருந்த எண்ணெய்ச்சிந்துப்பாடல்களை ஒட்டிஅமைந்துள்ளது.

இவ்வாறு அடிக்கடி இனிமை சொட்ட கவிபாடிய புலவர் தர்க்கவாதத்திலும் தனக்குள்ள திறமையை பிரகலாதன் தன் தாயிடம் ''தந்தை இறைவனென்ருல் ஆக்கட்டும் ஓர் எருமையை இக்கணமே, மறுகணமே அப்பாவை இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொழுவேன்'' எனுமிடத்திலும், ''நீர் மூழ்கும் மனிதன் தான் மூழ்கி மடிகையிலே கார் என்பேரர்க்குக் கரத்தைத்தா னீயலாமோ? இல்லாத பொருளையல்லோ எடுத்துக்காட்டவேண்டும்'' என்று தகப்பனிடம் வாதிடுமிடத்திலும் எடுத்துக்காட்டுகிறார்.

செய்யுள்களில் சில சீர் அடி கூடியும், சிலகுறைந்தும் உள்ளன. சில இடங்களில் எழுத்துப்பிழைகளும் மலிந்துள்ளன. இவற்றைத் திருத்திப் பதிப்பதானுல் அதன் பழமை கெட்டுவிடும் என நினைத்தேன். ஆகவே நூலில் உள்ளபடியே செய்யுள்களைவிட்டு அத்தியாயங்களாகப் பிரித்து, இடைக்குறிப்பும் எழுதி பதிப்பிக்கின்றோம்.

இதை இன்னும் விமர்சிப்பதிலும் பார்க்க வாசகர்களை உள் நுழைந்து அம்மானை பாடி அகமகிழ விட்டு விடை பெறுகிறேன்.

இங்ஙனம்

தேற்றுத்தீவு.
8-10-1964.

கி. சீ. செல்வராஜகோபால்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 10 | கழுகு | கமுகு |
| 14 | 12 | குன்றெயனவே | குன்றனவே |
| 22 | 16 | பழிவரதோ | பழிவராதோ |
| 24 | 13 | பரராளந்த | பாரளந்த |
| 24 | 13 | பாரப்த | பாரதப் |
| 27 | 3 | இரனியன் | இரணியன் |
| 33 | 18 | புகழ்ந்துதோது | புகழ்ந்தோது |
| 42 | 7 | என்றிமிலாவாயு | என்றுமிலாவாறு |
| 43 | 2 | தன்ா சிவக்க | தான் சிவக்க |
| 50 | 12 | மர்யமாம் | மர்மமாய் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லும் கருத்தும்.

| | | |
|---|---|---|
| அல்லாதன | — | வழக்குக்கு ஒவ்வான. |
| ஆணி | — | எழுத்தாணி. |
| ஆலா | — | கழுகினப்பறவை. |
| ஆவாரம் | — | பொன்னவரை. |
| உப்புக் கண்டம் | — | உப்பிட்டு வாட்டிய மாமிசம். |
| உரி | — | பட்டை. |
| உருத்த | — | வளர்த்த |
| எத்தர் | — | ஏமாற்றுவோர்: |
| எல்லா | — | மன்னிக்கமுடியாத |
| ஓராட்டல் | — | தாலாட்டல் |
| கலை | — | ஆடை. |
| கிஞ்சல் | — | பழி |
| சல்லு | — | நீரில் பரவி வளரும் ஓர் நீர்ப்பூண்டு. |
| சுழல் நரகச் சக்கரன் | — | இயமன் |
| சுன்னாகத்தோன் | — | சிவபெருமான் |
| சூர் தடித்த வேல் | — | சூரனை கொன்ற வேலாயுதம். |
| சேதி | — | செய்தி, நிகழ்ச்சி |
| சோளிகைக்காரர் | — | சோதிடர் |
| நாண் மரம் | — | கொடி மரம். |
| பனுவல் | — | நூல். |
| பிரளுதல் | — | புரளுதல் - [மரூஉ] |
| மசண்டை | — | அந்தி |
| மண்டா | — | இரு கூர் தூண்டிலுள்ள ஈட்டி போன்ற ஆயுதம். |
| மம்மர் | — | துன்பம். |
| வங்கிசம் | — | வம்சம். |
| வசம் | — | இணக்கம். |
| வாகாய் | — | திறம்பட |
| விண்ணானம் | — | இகழ்தல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமந் நாரயணுய நம:



UNIVERSITY OF CEYLON LIBRARY

# இரணிய சம்ஹார அம்மானை

## காப்புத் துதி

### — விநாயகர் —

சீர் பெருகும் கணபதியைச் சிரம்பணியத்தான் துதித்து
நீர் வருக வருகவென நினைந்தழுது — கார்முகத்துக்
கை தொட்டுக் கை கூப்பி கனிபடைத்து நிற்பேனே
வையத்து வழங்கு தமிழ் தா.

### — திருமுருகன் —

சூர் தடித்த வேலால் சுனை கிடந்த நக்கீரற்கு
கூர் அறிவுணர்த்தி நின்ற குல முருகா — சீர்தமிழின்
செல்வாசெகத்திறையே செப்புமென் கவிதைகளில்
அல்லாதன அகலச் செய்.

### — சிவனுர் —

மதியைச் சடை தரித்து மார்க்கண்டர்க் கருள
விதியைப் பதமெடுத்து வீழ்த்தியவா—பதியில்
ஆய்ந்தெடுத்த தீந்தமிழில் அரிகதையை நான்பாட
ஓய்ந்திடா உவகை மிகத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—சரஸ்வதி—

அம்மையே மம்மர்தீர் அம்மையே அறிவு தவழ்
செம்மையுறு தீந்தமிழின் தேவியே — இம்மையிலே
ஏடெடுத்தேன் ஆணி இணைதமிழில் எழுதிடவே
தாழ்பணிந்தேன் தன்னருளைத்தா.

—விஸ்ணு—

ஆலையிலைத் துயின்று அவனிதனை உள்ளடக்கி
சேலைகளைத் திருடித் தீங்குழலில்—சோலைத்
தீந்தமிழைக் கனியைத் திரளும் பாலமுதை
ஈந்தவனே எனக்கருளைத்தா.

# நூல்

# அம்மானை அவதாரம்

—ஊர்ச்சிறப்பு—

கார்காத்து வேளாளர் கவின்தொழிலைச் செய்கின்ற
ஏர்கார்க்கும் மக்கள் இசைந்து வாழ் ஓர் தெருவும்
பேர்காத்துத் தமிழைப் பேணி அறங்காத்து
சீர்காக்கும் குருக்கள் திகழும் பேர்த்தெருவும்
சட்டி முட்டி செய்து சான்றோர்க் கீபவரும்
பெட்டி பாய் பின்னி பெருந் தொழிலைச் செய்பவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ச் சேதிகூறி உற்ற இடர் போக்கிடவே
சூர்ப்பறைகள் கொட்டும் சீர் மூப்பர் தன் தெருவும்
மற்ருேர்க்குப் பிள்ளை வண்ணுன் எனக் கூறும்
உற்ருர் போல் வாழும் ஊர்க் குடிகள் தன்தெருவும்
பற்றும் பொருளை பலபடவே தான் விற்று
மற்றும் நயம் கொள்ளும் வணிகர் தம் தெருவும்
ஒற்றுமையாய்க் கூடும் ஊரின் நடுச் சந்தி
சற்றுயர்ந்த ஆலமரம் சூடுதீர் நிழலினிலே
செற்ற மடங்கும் சிவந்தகதிர் தாளுெடுங்கும்
கொற்றங் குறையும் கொடு வெப்பம் தான் தணியும்
முற்றும் நிழல் மேவும் மூச்சடங்கும் வேளையிலே
கற்றைக் குழலார் கவிபாடும் வேளையிலே
மாலைவெயில் சூழும் மசண்டை சேர் நேரமதில்
சோலையெலாம் மயில்கள் சோபிக்கும் வேளையிலே

## II. முனிவர் சிறப்பு

சூர் தடித்த வே லும் துய்ய காவி ஆடைகளும்
மார் நிறைந்த தாடி மயிரடந்த மேனியராய்
கையிற் கமண்டலமும் கருணைமிகு மயிற் பீலி
வையில் விபூதியுடன் பாலகுரு வந்ததுபோல்
வந்தாரொரு முனிவர் செந்தாமரை மலர் போல்
தந்தாரருட் செல்வம் தவசிரேட்டவல்லிமையினுல்
யோகமும் கிரியைகளும் யுக்தியுடன் செய்து
யாகமும் சமாதிகளும் ஞாலமதிலே செய்து
மூச்சடக்கி உள் நிறுத்தி மூவுலக வலம் செய்யும்
ஆச்சரிய வித்தைகளும் அவனிதனிலே தான்புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தாயும் எந்தையும் ஏகனே ஏகனென்று.
புத்திமகிழப் புறமும் அகமுமொன்ருய்
அரகரா சிவசிவா வென்றனு நேரந்தவருது
பரகதியேதஞ்சமெனப் பாலித்து வாழ்த்துவதும்
வரமருள வேண்டி வனவாசஞ் செய்வதுவும்
கரங்கூப்பித் தியானித்து கண்மூடியிருப்பதுவும்
பக்தர்கள் கொண்டுவரும் பால் பழம் அருந்துவதும்
முக்தர்களுக்கான மோன நிலை காண்பதுவும்.
இத்தனையும் அன்றி ஏதொன்று மறியாது
உத்தமனுர் உயர்ந்த ஆலை மர நிழலில்
வந்திருந்த சேதி வையகத்தில் பரவிடவே.
முந்தியடித் தோடி முதியவர்கள் வரலானுர்
சந்தி நிரம்பும்படி சகலருமே கூடிவந்தார்
பந்தி பந்தியாகப் பாலகர்கள் உட்கார்ந்தார்
வயலில் இருந்தோர் வணங்கிடவே ஓடிவந்தார்
அயலில் இருந்தோர் அக்கணமே ஓடிவந்தார்.
மாதர்கள் மதலையுடன் வரிசையாக உட்கார்ந்தார்
பாதகரும் தீது புரிவோரும் வந்திருந்தார்
இந்தவிதமாக எல்லோரும் வந்திருக்க
சுந்தரமான ஊரின் தொல் தலைவர் தானெழுந்து

## III. முனிவரைத் தொழுதல்.

ஐயா சரணம் அடியேற்கு அறம் தருக
மெய்யா சரணம் மேதினியில் நீ வாழ்க
பொய்யா மும்மாரி பொழிக பொழிந்திடவே
நெய்யுடனே செல்வம் நெழிந் தெங்கும் ஓடுகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சரணம் சுந்தரனே எம்பிரானே
உவாமதி போல் இங்கு எழுந்தருளும் தவமுனியே
செங்கை குவித் தோம் சிவாசிவா எனத் தொழுதோம்
இங்குவர நாங்கள் என்ன தவம் செய்தோமோ.
புங்கவரே போற்றி புகலிடம் நீயல்லவோ
எங்கள் குறை தீர்க்க இங்குவந்த பேரிறையே

## IV அறவுரை கேட்டல்

இவ்வாறு கூறி எழுந்தருளச் செய்தருளி
அவ்வையுரை நீதியுரை அறவுரைகள் கேட்டிருந்தார்
பாரதமும் பதப்பொருளும் பார்தனிலே கேட்டிருந்தார்
சாரங்கதன் கதையும் கருத்துடனே கேட்டிருந்தார்
முற்றும் துறந்த முனிவர் கதை கூறுகையில்
சுற்றம் மறந்து சூழ்ந்தவர்கள் செவிமடுத்து
பற்றற்ற நிலையில் பரவசமாய்ப் பாங்காகி
கொற்றவன் முன் ஏவலர் போல் கூடியிருந்தார்கள்
நிகண்டும் கருத்தும் நீதி நூல் காவியமும்
அகண்டமனு நூலும் அறவுரையும் கூறியபின்
புராணம் புகழ்பாடல் பூவையருக்கருநீதி
வராகமெடுத்த கதை வயிரவரின் பூர்வகதை
சூதாடிக் கெட்டோர் சூழ்ச்சிசெய்து மாண்டோர்
வர்தாடி வஞ்சனையால் வாழ்க்கை இழந்தவர்கள்
நெஞ்சாரப் பொய் சொல்லி நெருப்பு மடிகொண்டோர்
பஞ்சமா பாதகத்தால் பாவியாய் மடிந்தோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை பேரினதும் எழில் கதைகள் தான் கூறி
முத்தி நிலைபுகன்ற முனிவரும் ஏதுரைப்பார்

## V. கதை ஆரம்பம்

கேளுங்கள் அன்பர்களே கிழவன் என்னுரையை
நாளும் மறவாதீர் நம்பரனைக் கனவிலுமே
எல்லா உலகும் எமக்காக்கிக் காத்தருளும்
வல்ல பரன் நாமம் வாயாற் துதியார்க்கு
சொல்லவொணு நரகம் சூழுமே அன்பர்களே
வெல்ல முடியாவிதி வீறுடனே சூழ்ந்திடுமே
தெய்வத்தை நிந்தை செய்து சீரழிந்தோர் கதை ஒன்று
உய்ய வழி ஒன்று உபதேசிப்பேன் கேளிர் என்றூர்
ஆவலுடனே மக்கள் அனைவரும் அரோகரா வென்று
பாவலனே நீதிப்பனுவலே கூறுமென்றூர்
தேவனவன் மகிழ்ந்து தேன் போலச் செப்பலுற்றுன்
மூவரும் போற்றும் முதல்வனைத் தான் துதித்து
முக்கண்ணனை வேண்டி முருகனைத் தான்நினைந்து
எக்கணமும் துணையெஃறு எழில்மாலை தோத்தரித்து
ஆணவத்தால் மாண்ட அரக்கன் தன்கதையைத்
தூணதனுல் உண்மை தூய்மையானவன் கதையை
ஏகன் இல்லை உலகில் என்னைவிட ஒருவனில்லை
தோகை மயிலேறும் சுப்பிறனும் கரிமுகனும்
வாகார் சிவனும் மன்னும் பல தெய்வங்களும்
சாகா வரம் பெற்ற எந்தனக்குச் சரி நிகரோ
திருமாலென்ன பெரிதோ திருவுடையாள் பெரிதோ
உருவமில்லாமால் வரட்டும் உதைக்கிறேன் என்ற அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகனை மதியாத எத்தனின் இக்கதையை
வாகாய் உரைப்பேன் வண்ணமுறக் கேட்டிருப்பீர்
காருண்ணியன் தன் பெருமை காதாலும் கேட்காத
மா இரண்யன் மாண்டகதை வையகத்தில் கூறிடுவேன்
என்று இறை தொழுது இனிய குரலெடுத்து
அன்று முனிவன் அறைந்த கதை தன்னை

## VI. அவையடக்கம்

இனிய இசை மிகுந்த இயல்பான அம்மானைக்
கனியைப் பிசைந்துகன்னல் பால் சேர்த்து
பாடுகிறேன் அபயம் பாரில் புலவரே
ஆடுகிறேன் வான் கோழி ஆட்டமிதுவென்ன
ஆனதமிழ் கற்ற அனைவருக்கும் சிற்றறிவோன்
வான முயரும் அபயம் அவையோர்க் கடைக்கலமே

**குறிப்பு;** அம்மானைக்குரிய இலட்சணங்களின் படி இந்நூலே, ஒரு முனிவர் மக்களிடை எழுந்துவந்து தருமமுரைத்து, தவமுணர்த்தி, அறவுரை புகன்ற போது இக்கதையைக் கூறியதாகவும், அதனை இந் நூலாசிரியர் செவிமடுத்து அம்மானையாகப் பாடுவதாகவும் கூறுகிறார். அதற்கு அவையோரிடம் அடைக்கலம் வேண்டுகிறார். இந்நூலில் சிவனுக்கு முதல் விநாயகரையும் முருகனையுமே நிறுத்துகிறார். காரணம் அவர் பக்தியோ அல்லது சிவன் — சக்தி திருமணத்தை விநாயகர் நடத்திய, தந்தைக்கு முருகன் உபதேசித்த புராணயுக்தியோ நாமறியோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I நாட்டுச் சிறப்பு.

நாடான நாடாம் நல்ல நகர் மாயாபுரி
மேட்டினிலும் நீர்பாயும் விளைச்சல் குறையாது
நானு விதச் சிறப்பும் நளின மலர்ச் சோலைகளும்
தேனூர் மொழிக் கிளியும் திகழ் நடன மயில் வனமும்
சிற்ருறும் பேராறும் சீராக ஒடுவதால்
வற்ருத வாவிகளும் வளமார்ந்த வாய்க்கால்களும்
எங்கும் செறிய எழில் மரமும் செடி கொடியும்
பொங்கும் கரும்பும் புனல்வாழை தெங்குகளும்
மாவும் பலாவும் மற்றும் கனி தருவும்
தாவும் கமுகும் தளராது வளர்ந்திருக்கும்
வள்ளிக்கிழங்கும் வடிவான வெற்றிலையும்
துள்ளும் கதிர் பரப்பும் துடியான செந்நெல்லும்
எங்கும் பரந்திருக்கும் எழிலான மாயபுரி
பொங்காத செல்வமங்கு புவியினில் வேறெங்கு பொங்கும்
வேளாளர் மேன்மையில் மேவுபஞ்சமண்டாது
காளைகளால் வீரர்களால் கவலை எதும் சேராது
காராளர் தெருவெங்கும் களம் கொணர்ந்த நெற்சூடு
சீராளர் தெருவெங்கும் செகம் புகழும் பெருநீதி
பாராளர் தெருவெல்லாம் பகைவர்தம் உடல் வாடும்
தாரளமாக் கொடுப்டர் தன வணிகர் தம்பொருளை
ஒடெடுத்துப் பிச்சை வேண்ட ஒருவருமே அங்கு இல்லை
ஏடெடுத்துப் படியாத எத்தர்களும் ஒருவரில்லை
நாடெங்கும் நல்லவர்கள் நலமுறவே வாழ்பவர்கள்
ஆடரங்கும் பாடரங்கும் அரிவையர்கள் நாடரங்கும்
சூழவரத்தென்றல் சுழன்றுவரும் பூமணங்கள்
ஆழவரும் மன்னர்க்கணிகலனுய் அழகு செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் பூங்கா எழிலான நங்கையர்கள்
தங்கித் தனித்துத் தான்விளையாடல் செய்வார்.
பந்து சிலம்பு பாடல் கும்மி பல்லாங்குழி
குந்தி கழங்கு குறுபுனல் நீர்ப் போராட்டம்.
சிந்தாத மலர் பறிப்பு சிரித்து விளையாடல்
அந்தாதி அம்மானை ஆடுகழல் வெறியாடல்
சிறுமனை கட்டிச் சீராட்டி ஓராட்டல்
குறுகி நடந்து ஓடி கண்கட்டி ஆள்பிடித்தல்
இத்தனையும் இன்னும் ஏராளமான பல
எத்தனையோ ஆடல்களை இன்புடன் ஆடிடுவார்.
பந்துகள் அடித்திடுவார் பாடிக்குதித்திடுவார்
சந்தோசமாகச் சாயல்பல கொண்டிடுவார்
எல்லாவித வளமும் எங்கும் பொலிந்த நல்ல
நல்ல மாயாபுரி நளினமிகு நாட்டினிலே.
மலையும் மலைவளமும் மருதமுடன் நெய்தல்
நிலையான முல்லை நெடும்பாலை வளஞ்சிறக்கும்
மாயாபுரி நாடு மண்டலத்தில்பேர் நாடு
ஓயாத யாகமதால் உயர்ந் தோங்கும் சீர்நாடு.

## 2. நகர்ச்சிறப்பு.

மாயாபுரி நாட்டின் மத்தியிலே மலர்ந்த தென
வாயார வாழ்த்தும் வளநகரைக் காண்பதற்கோ
ஆயிரங் கண் வேண்டும் அதன்புகழ் பாடுதற்கோ
ஆயிரம் நா வேண்டும் ஆதிசேடனால் முடியா.
ஏழடுக்கு மாளிகைகள் எண்ணமுடியா உயரம்
சூழ பலவீதி துலங்குமந்த நகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழப்பறந்திடவே தானஞ்சி ஆலாவும்
மீளாத கவலையுடன் மென்மேலுயர்ந்து செல்லும்
ஏழடுக்கு உப்பரிகை எங்கும் நிலவெறிக்கும்
தாழமுடன் எங்கும் தகுந்த இசை முழங்கும்
உயர்ந்து சிறக்கும் உப்பரிகை வான் முட்டும்
நயந்து கொடிபறக்கும் நாண் மரங்கள் விண் முட்டும்
சூரியன் பட்டாலும் சுடர் விட்டுச் சாளரங்கள்
காரிருளைப் போக்கிக் கனக சுடர்தான் வீசும்
மாடிகளில் சோடிகளாய் மன்னவரும் தம்மினிய
மோடி செய் கோதையரும் முயங்கி உலாவுவதோ
வானத்தில் வெள்ளிகளும் வரம் பெற்ற சோதிகளும்
மோனத்தில் உலாவல் போல் முடியாத காட்சியம்மா
முற்றத்தில் மல்லிகையும் முகை விட்ட பூமரமும்
கொற்றத்தில் கொடி மலரும் கோடிமணம் வீசுதம்மா
செற்றமடங்கும் சினமடங்கும் வீரர்களின்
பற்றுடைய பரிகள் பறந்து செல்லும் ஓசைகளும்
வானமதிரமதிலிடித்து வெற்றி கொள்ளும்
ஆனை அணி நடக்க அதிலொலிக்கும் மணி ஒலியும்
போராடி வெற்றி கொண்டு புகழ் பறக்க ஓடிவரும்
தேரோடும் ஓசை கண்டு தெருவடங்கும் ஓசைகளும்
மன்னர் புகழ் பாடி மாகவிகள் தான் போற்ற
கன்னலென மங்கையர்கள் களி நடனந் தானுட
பகைவன் தலை கொய்து தம் பாவையரைக்காணவரும்
வகையான படைவீரர் வழி குறுகும் ஓசைகளும்
களம் விட்டு வெற்றி கொண்டு கடுகிவரும் காதலரை
உளம் விரும்பி ஓடி வரும் உவகைதரு பெண்ணாரின்
இன்னிசைச் சிலம்பும் ஏழிசைக் கருவிகளும்
கன்னியரின் குரலொலியும் சலந்து இசை ஆகுதம்மா
மாளிகை மேலிருந்தால் வளர் பாதை செல்லுகின்ற
சோளிகைக்காரர்களும் சுடரான மங்கையரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப் பதுமை எனச் சிறிதாகக் கண்களுக்கு
மின்னலிடைப் பொம்மை என மெலிந்து உருத்தெரியும்
அத்தகைய உயரம் அந்த மாடமாளிகைகள்
அத்தனையும் பார்த்தால் அருங்கயிலை எனத் தோன்றும்
சுற்றுமரண் சூழ்ந்த சூழ்ச்சி மிக நிறைந்த
சுற்றூரண் நிறைந்த கன நகரின் அதிபதியாய்

## 3: நாரதர் இரணியனைத் தவஞ்செய்வித்தல்.

தோள்வலிமை வாள் வலிமை துரித கெதி வலிமை
ஆள் வலிமை அரண் வலிமை ஆன பெரு வலிமை
நீதி வலிமை நேர்மை தகு பெரு வலிமை
வீதி வலிமை விண்ணவரும் அஞ்சும் நல்ல
படை வலிமை கொடை வலிமை பகரரிய நடை வலிமை
உடை வலிமை உள வலிமை உலகஞ்சும் மிக வலிமை
இத்தனையும் கொண்ட இரணியகசிபு என்பான்
புத்தியுடன் யுக்தியுடன் புரந்து வருநாளில்
கோயிலெங்கும் வேதம் குறைவுபடா பூசைகளும்
வாயிலெங்கும் வேத மந்திரமே ஒலித்திடுமே
நாற்றிசையும் தருமம் நல்ல சுக வாழ்வதுவும்
போற்றி செய்து மானுடர்கள் புகழுடனே வாழ்ந்தார்கள்.
கொல்லும் வரிப்புலியும் கோபமிலாச் சிறு பசுவும்
புல் மேய்ந்து நீர்ருகே போயொன்றாய் நீரருந்தும்.
வல்ல பருந்தும் வடிவான புறாவினமும்
உல்லாசமாக ஒன்று சேர்ந்துறவாடும்
அல்லாவைத் தொழுகும் அலியாரும் சிவனடியை
நல்லாக வணங்கும் நம்பியும் நண்பர்களாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமும்மாரி மழை பொழியும் நீதியுடன்
வேதம் முழங்க வெண்கொற்றக்குடை நிழற்ற
மனுராசன் மகிழ மாந்தர் துயர்தீர
பனுவல் புகழப் பாராண்டிருந்தானே
இப்படியாக இருக்குமந்த வேளையிலே
எப்புறமுஞ்சுற்றி இரு உலோகும் ஆராய்ந்து
கையிலே வீணையுடன் கணநாதந்தானொலிக்க
ஐயன் நாரதரும் அவனியில் தான்வந்தார்
வந்து இரணியனே நீவாழ்க வாழ்க பல
பந்துசனம் சூழப் பலகாலம் வாழ்ந்திடுக
என்றவனை வாழ்த்தி இரணியனே சொல்வதைக்கேள்
நன்றுலகமதிலே நாடெல்லாம் போற்றிடவே
என்றும் இறவாது இடர் ஒன்றும் நேராது
இன்று போல் என்றும் இளமையேகுன்றாது.
நீவாழவேண்டும் வாழ்வதற்கு வகையுரைப்பேன்
ஆவார மரஞ்சூழும் அகன்ற பெருவனமும்
தாவிப்பறந்தாலும் தான்எட்டா உயர் மலையும்
ஆவிபிரிந்தாலும் அண்டமுடியாப் பேர்நதியும்
கொண்ட கைலை மலைக்கருகிருக்கும் கொல்லிமலை
அண்டி நீ தவஞ் செய்து அரனைத்தியானித்தால்
யாராலும் ஏதாலும் யாவின்பலத்தாலும்
சீராலும் சிறப்பாலும் திகழ் பூமிப்பலத்தாலும்
வெல்லமுடியா உன்னை கொல்லமுடியாவரமும்
சோல்லமுடியாப். பலமும் சுகமுடனே பெறுவாயென
சொன்னது கேட்டுத்துடித்து எழுந்திருந்து
மன்னவன் நாரதரை வலம் வந்து நமஸ்கரித்து
ஐயா உம் ஆசி அடியேனுக்கு இருந்தால்
மெய்யாய் அரன் வரத்தை மேவிடுவேன் என்றவனும்
மந்திரிமார் தன்னிடத்தே நாட்டை ஒப்புவித்து
தந்திரமிக்கோரிடம் தன்படையைத்தான் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு வனங்கடந்து கல்முள் வழிகடந்து
கோடுயர்ந்த மலைகடந்து கொப்புள்ள மரங்கடந்து
பேராறு சிற்ருறு பெரிய கங்கை வாவிகளும்
காராறு காட்டாறு கடு முதலை சேர்குளமும்
கடுவாய் கரிநிறைந்த கானகமும் காற்றதுவும்
கொடுவாய் அடங்கும் தூர்வழியுங்கடந்து
பெருமலையின் அருகினிலே பேராற்றங் கரையினிலே
அருவிவிழும் சாரலிலே ஆலமர நிழலினிலே

## 4:- இரணியன் தவநிலை.

கண்களை மூடிக் கைகூப்பி சிரசில் வைத்து
எண்ணியே அரன் நாமம் எந்நேரமும் துதித்து
கால்களை மடக்கி கடும் மனதைத் தான்நிறுத்தி
வேல்விழியார் ஆசை வெகுவாகத் தான்மறந்து
சிவசிவா என்குருவே சிற்பரனே தற்பரனே
அவயம் அவயமையா அரனே எனக்கருள்வாய்
மூவுலகம் புரக்கும் முக்கண்ணு முழுமுதலே
ஆவுடைய கோவே ஆனந்தப் பேரொழியே
திருவே என் செல்வமே தேனூர் தருசுகமே
அருவே என்னுருவில் அடக்கும் பெரும் பொருளே
கல்லாப்பிழை பொறுக்கும் காருண்யா கருணுகரா
எல்லாப் பிழைசெய்த ஏழைதனைக் காருமையா
அகர முதலெழுத்தே ஆதி வான்நிறையும்
பகவா உனைத்தொழுதேன் பார்தனிலே காருமையா
வாழையடி வாழையாக வந்த திருவருளே
தாழையணி புங்கவனே தண்ணளியைத் தாருமையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமனமடக்கி இரும்பாக உடல் வளைத்து
துன்று பனி வெயிலைத் துச்சசமாய்த்தான் மதித்து
பத்தறிவு கெடுக்கும் பசியைத்தானடக்கி
உத்தமனை நினைத்து உறக்கத்தைத்தான் மறந்து
தாடி வளரத் தானதிலே பேன் வளர
ஓடிவரும் கறையான் உயர்ந்த புற்றெழுப்ப
செய்த தவநிலையைச் சிவனார்தான் கண்டு
உய்யும் வரங் கொடுக்க உமாபதி தன்னுடனே

## 6. இரணியன் சாகாவரம் பெறல்.

இடபமதிலேறி இருடிகள்தான் சூழ
நடமிடு கந்த ரூபர் நாலுவித தேவர்களும்
பூமாரி பெய்யப் புகழ்பாடக் கின்னரர்கள்
கோமான் இரணியன்முன் குன்றெயனவே வந்துநின்றார்
கண்டதும் இரணியனும் கைகூப்பி கண் மலர
தண்டனிட்டுக் கோவே தருமமறை முதலே
அலகிலா உலகமதை ஆக்கிப்புரப்போனே
மலமகற்றும் வேதா வளர்பிறையைத் தரித்தோனே
என்னைக்கண்பார்த்த இறைவா பேரிறையே
பொன்னே செழுமணியே பூவே பூமணியே
தனிகரில்லாத் தலைவா தாள் போற்றி ஐயா
என்னை ஆட்கொள்ளும் இறைவா என்றழுதான்
உன்தவத்தை மெச்சி உவந்தேன் உனக்கெதுவோ
என்ன வரம் வேண்டுமென இரணியனும் கூறலுற்றான்
சாகாவரந் தந்து தானுலகைப் புரப்பதற்கு
ஆகமத்தின் நாதா அருளுமென அது கேட்டு
நன்று நன்று அவ்வாறே நடக்கட்டும் என்று கூறி
மன்றாடும் பரமன் மறைந்தவுடன் இரணியனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. இரணியன் நாடு திருப்பல்.

கோடுடைய கரிபோலக் கொண்ட மதமிஞ்ச
தோடுடைய சிவனுர் கொடுத்த வரஞ்சிறக்க
காற்ருக நடந்து கடுகி நகரதிலே
போற்றும் புகழ் மாலை புலவோர் பாடிடவே
எண்திசையும் நடுங்க இவர்ந்து இசை தாள் பணிந்து
பண்புடனே ஆட்சி பல படவே புரிந்திருந்தான்
பகைவர்தனை அடக்கி பாலிக்கும் நாளினிலே
தகை மிகுந்து மூவுலகும் தானே புகழ் பரந்து
வலிமை மிக்க இரணியனும் மதங் கொள்ள ஆரம்பித்து
எலி புலி ஆனதுபோல் எவருக்குமஞ்சாது
திட்டிய கல்லினிலே கூர் பார்க்கும் குறளன் போல்
ஆட்டமிட்ட உலகை ஆண்டவர்கள் எனக்கடிமை
பொன்னுமடிமை புவிப்பொருளெல்லாமடிமை
மன்னவரும் மற்றவரும் மறவர்களுமே அடிமை
தேவர்களுமடிமை திரு நாடுமே அடிமை
காவலரும் கன்னியும் கந்தருமே அடிமை
தன்னை விடப்பெரிய தற்பரன் எவனென்ருே
உன்னினுன் ஒரு நாள் ஒன்றுமே புரியவில்லை

# 7:- மன்னன் மமதை.

எல்லோரும் பணியும் எம்மன்னருங்கை கூப்பி
சொல்லாமலே பணிகள் சோர்ந்திடவே செய்கிருர்கள்
மாதர்கள் வரிசையுடன் மாமன்ஞ எனப்போற்றி
நீதர்கள் நல்லவர்கள் தினமும் வந்தே ஏற்றி
அத்தன் புகழ் கொண்ட எனக்கு நிகர் இவ்வுலகில்
ஒத்தருமே இல்லை என ஓங்கு அகங்காரமுற்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8:- இரணியன் கட்டளை

என்னைவிடப் பெரிய இறையோன் எவனுமில்லை
மன்னுமூவுலகும் மதிக்கும் மா தெய்வமே நான்
ஏகன், இறைவன், எல்லோர்க்கும் தலைவன்
ஆகமங்கள் போற்றும் அதிகாரக் குடையோன்
பாகான பக்தி செய்யும் பக்தர்களுக்கு அருளுபவன்
சாகா வரமுடைய இரணியனே ஏகதெய்வம்
இன்று தொட்டு எங்கேனும் என்னுமம் அல்லாது
என்றும் எவரும் வேறென்று சொன்னலோ
கொன்று விடுவேன் குடல் சரியப் பித்தெடுப்பேன்
மன்றுள் நடனமிட மாலையாய் அணிந்திடுவேன்
வேதத்திலுள்ள வேறு பெயரெல்லாமழித்து
சாதகத்திலுள்ள சற்தேவர் பேரழித்து
கோவில் கல்வெட்டு குளமெலாம் என்பெயர்க்கே
நாவினிலே இரணிய நம வென ஓதிடவே
உரித்தாய் எழுதி ஓம்நாராயண என்பதையும்
அரிச்சுவடி முதலாய் அழித்தெழுதி அங்கு எல்லாம்
இரணியாநமவென எழுதி விடுங்கள் என்றான்
மரணமுறுவோர்க்கும் என்னுமம் கூறுவிடில்
சுவர்க்கம் புகவிடாது தூக்கி எறிவேன் நான்
அவக்கதை. கூறி அறிவு சொலமுதலும்
என்னுமம் கூறி எவரும் தொடங்க வேண்டும்
என்னுருவம் என்னுமம் எங்கும் திகழ வேண்டும்
பொற்கோவில் தனில் உள்ள பூச்சாண்டிக் கிருஷ்ணனை
கற்றூணில் போட்டுக் கடிதில் உடையுமென்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இரணியன் தன்னை வணங்க ஏவுதல்.

ஆண்டவர் என்னடிமை அறிவீர் அவனியோரே
வேண்டாமடா மால் கோவில் வீரரே இடியுமென்றான்
ஆண்டவனை வேண்டுவோரை அடித்திழுத்து வாருமடா
தோண்டிச் சுடுமணலில் துயர்படவே புதையுமடா
என்னைவிடப் பெரியோன் இவ்வுலகில் இல்லையடா
சுன்னகத் தோனும் சுழல் நரகச் சக்கரனும்
கண்ணனும் காளிங்கன் கடு நடனம் புரிந்தவனும்
பெண்களின் பின்னே பித்தனாய்த் திரிந்தவனும்
ஆயர் பாடி வளர்ந்தவனும் அசோதை அடிபட்டவனும்
மாயனெனப் பெயர் வாங்கி மாமனைக் கொன்றவனும்
கோபியர் துகில் கொண்டு குழலூதித் திரிந்தவனும்
நாபிக் கொடி தனிலே நலமாதைக் கொண்டவனும்
விஜயனுக்குத் தேரோட்டி வீரமில்லாப்பாம்பாட்டி
கஜ முகனுக்குபகாரி கள்வர்களுக்குத்தலையாரி
இந்தவிலாசமுள்ள எத்தனைக்கடவுள் என்றால்
மந்தகாசமும் பெலனும் மாவலியும் உள்ளஎன்னை
தெய்வமெனல்தீதோ திகழ்வரம் நானருளேனோ
உய்யவழிகாட்டி உகந்த வரம் கொடேனோ
எறும்பு முதலாக எல்லாச் சீவராசிகளும்
இறும்பூதெய்திடவே எனை உவந்து சேவியுங்கள்
என் பெயரைக்கூறி எவன் ஒருவன் வேண்டுவானோ
அன்பன் அவனை நான் ஆட்கொண்டு அணைத்திடுவேன்
பொன்னும் பொருளும் பொதிய சுகம்யாவும்
கன்னல் மொழிமாதும் கவலையில்லாச் சுகவாழ்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. கடவுளை வணங்கில் கடுந் தண்டனை.

எல்லாப் பெருவாழ்வும் ஈவேன் அன்றிமற்று
வல்லபரம் பொருளாய் மாலே வணங்கிடிலோ
தொல்லைகள் நேரும் துயரம் பல சூழும்
பொல்லாத தீவினையால் பீடித் துழல்வீர்கள்
என்னை விடப் பெரியோன் இவ்வுலகில் இல்லையடா
மன்னன் என்னைத்தொழுதால் மறுமையிலும் சுகம் பெறுவர்
கட்டளையை இட்டான் கடிதுபல நாடுகட்கும்
இட்டமதாக இன்றே கைக்கொள்ளு மென்று
தப்பினுல் நாடு சாம்பலாக மாற்றிடுவேன்
உப்புக் கண்டம் போட்டிடுவேன் உயிரை மாய்த்திடுவேன்
எலும்புகளை நொருக்கி எருக்கிலைக்கு உரமிடுவேன்
உலுப்பி உயிர் எடுப்பேன் ஊமையராக்கிடுவேன்
ஆண்டவன் என்றுலே மூண்டிடும் கோபமடா
நீண்ட நாக்கதனை நெம்பியே துண்டாடிடுவேன்
காண்டிபந் தன்னுலே கழுத்தைத் தறித்திடுவேன்
தூண்டிலில் கண் கொத்தி தூக்கி எறிந்திடுவேன்
கையெடுத்துத் தற்பரனைக் காருமெனக் கும்பிட்டால்
கைவெட்டிப் பொரித்துக் கடவுள் பிரசாதமென்று
உண்ணுமென வாட்டிடுவேன் உதிரந்தனை எடுத்து
புண்ணிய தீர்த்த மென்று புகட்டிடுவேன் வாய் திறந்து
இவ்விதமாக இரணியனும் கூறிடவே
அவ்விதமாய் நடக்க அனைவரையும் பணிப்பதற்காய்
ஊர் முரசம் கொட்டி உலகெங்கும் பறை கூறி
பேர் நாமம் இரணியனே பெருந் தெய்வமென்றுரைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கட்டளைக்கிணங்காதோர்.

கட்டளையை இட்டான் கடிது பல நாடுகட்கும்
இட்டமதாய் இன்றே இரணியனே தெய்வமென
காவலர்கள் எங்கும் கனகச்சிதமாகவேதான்
காவல்கள் செய்தார் கட்டளையை மீறியேதான்
கோயிலை வலம் வந்தால் கொடியவனே எஃறிழுத்து
நாய் ஒன்றைக் காட்டி நல்லவலம் வாடா என்றார்
கால் வெட்டி அதை நட்டு கனகலிங்க மிது வென்று
கோல் கொண்டு துள்ளி வந்து கும்பிடு போடு மென்பான்
தட்டுத் தவறித் தம்பிரானைப் பணிவோரை
கூட்டியிழுத்து வந்து குடல் பிதுங்க மிதித்திடுவார்
இரணியா நம வென்று எவரேனும் சொல்லாவிட்டால்
கரமிரண்டும் கயிறுகட்டி கடு நெருப்பில் வீழ்த்திடுவார்
விசத்தைக் கொடுத்திடுவார் வேலாலே குத்திடுவார்

வசம் வராவிட்டாலே வண்டிலில் பூட்டிடுவார்
நாராயணா நம வென்றால் நாக்கைப் பிடுங்கிடுவார்
பாரயணம் பண்ணுவோரின் பல்லைக் கழற்றிடுவார்
கல்லில் இடறவைத்து கடுமூசால் குத்திடுவார்

புல்தனை மேயவிட்டுப் புறம்நின்றடித்திடுவார்
மலை நின்றுருட்டிடுவார் மார் மீதுதைத்திடுவார்
அலையில் வீசிடுவார் அடிமேலே அடிஅடிப்பார்

உலை தனிலே தள்ளிடுவார் உருட்டி உதைத்திடுவார்
வலை வீசிப் பிடித்திடுவார் மண்டாவால் குத்திடுவார்
நெருப்பாலே குறியிடுவார் இரணியன் நமவென்று
இருப்புலக்கையாலே எழிலாக எழுதிடுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விதமாக இரணியனைத் தெய்வமென
எந்த விதத்தாலும் ஏற்காத மக்கள் தன்னை
நைய அடித்து நரக வேதனைகள்செய்து
வையகத்தில் தீமை வாகுடனே செய்ததினால்
கோயிலெங்கும் பாழ் அடைந்து குருட்டுவௌவால் தொங்க
தாயில்லாப்பிள்ளைபோல் தலமெங்குந் தானுறங்க
வாசல் அடைத்து வயிரக்கதவடைத்து
பூசை புனர்க்காரம் புண்ணியமெலாம் அடைத்து
நீசன் இரணியன் நீள் நாமம் தானெழுதி.
வாசல் முழுதும் வடிவாகத் தொங்கவிட்டு
பாசமறு தெய்வத்திற்கு பார்தனிலே சட்டமிட்டு
வாசமுறு மலர் தூவும் வழிபாட்டு முறை தவிர்த்து
காவலிட்டு வீரர் கடிதான ஆணையிட்டு
நாவடக்கி மெய்யடக்கி நலமான உளமடக்கி
தெய்வப்பேர் அடக்கி திருவணக்க முறையடக்கி
உய்ய வழியடக்கி ஊர் அடக்கி வைத்ததினால்
எங்கும் பார்தனிலே எள்ளளவும் ஆண்டவனின்
பொங்கு புகழ் நாமம் பொசிவதில்லை வெளியே
மங்கையர்கள் தெய்வமதை மலர்கொண்டு துதிப்பதில்லை
கங்கை நீராடலில்லை கைலை மேல்பாடலில்லை
கதிரமலை வெளிச்சம் கனநாளாய் எரிவதில்லை
பதியான வேங்கடத்தில் பகலிரவுப் பூசையில்லை
மதியுடையான் வாழும் வளர் நகர் காசிதில்லை
பதி இழந்தமங்கைபோல் பாழடைந்து போச்சுதம்மா
ஏழுபடை வீடுகளும் இறுக்க் கதவடைத்து
சூழு விடைத்தலமும் சூரன்மலை உகந்தைமலை
ஏழு நதி தீர்த்தம் இலங்கு நகர் வாழ் மூர்த்தி
வாழும் மலை முனீஸ்வரமும் வரண்டநதி போலாச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் தனைப்பிடித்து குவலயத்தில் காவலிட்டு
அருச்சகரைத்தான்பிடித்து அரிதானமறியலிட்டு
செய்த செயல் கண்டு சிந்தை நொந்தார் சிவதொண்டர்
உய்ய வழியின்றி உடல் மெலிந்தார் மாலடியார்
பக்தர்கள் எல்லோரும் பயங்கொண்டு பரமன்தனை
எக்காலும் மறவாத எண்ணமே தோத்திரமாய்

## 12. பயந்து பரமனைத் தொழுதல்

மனமே ஆலயமாய் மந்திரமே பூசையாக
வனவாசம் செய்பவர்போல் வணங்குவார் திருமாலினையே
கோவில் இருந்த விடம் குளங்கள் தூர்ந்தவிடம்
கூவிமுனிவர் குழாம் குறையிட்டுத் தொழுத இடம்
கடந்து செல நேர்ந்தால் கர்த்தனை வணங்கிடவே
இடது வலமெனவே எத்திசையுமே பார்த்து
யாருமிலை எனக்கண்டால் நண்ணுமொரு நொடிக்குள்ளே
காருமெனை என்று கணத்துள் தொழுது செல்வார்
வெளியிலே இரணியனே வேதமுனை தெய்வமென்றும்
அழியாத சக்திஎன்றும் அன்பின்றுரைத்திடுவார்
வடமுவாக்கினிபோல் மனது குழம்பிடவே
அடகெடுவா உன்னையோ உயர் தெய்வமெனலாச்சு
மூளிக் கலங்கரம் மூக்கறைக்கு மூக்குத்தி
தாழ் இல்லா முடவனுக்குத் தங்கப் பாதசரம்
கோழிக்கு மயில்ஆட்டம் கோரைக்குவைரப்பேர்
ஆழிக்கு உச்சிமலை அலிக்கு வீரக்கழல்
கள்வனுக்கு தலையாரி கபடனுக்கு வில்விஜயன்
உள்ளமிலா மூடற்கு உயர்ந்த பிரகஸ்பதி
வெள்ளிக்குத் தங்கம் வீணனுக்கு வெற்றிவடம்
கள்ளிக்குத் தேவதாரு கன பெயரீந்ததுபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணியனைத் தெய்வமெனல் என்பார் பாரிலுள்ளோர்
மரணம் வந்திவனும் மடிவது என்றுளோ
செத்துத் தொலையானே சீரழிந்து போகானே
புத்து நாகங் கொத்தி புரண்டு இறவானே
ஆண்டவனைத் தூசிக்கும் அற்பப் பதரிவனை
மாண்டொழிக்க மாட்டாயோ மாலே மாயவனே
என்று துதியாத இடரிலா மக்களில்லை
கன்று போல் கதறி கவலைப்படா தொருவரில்லை
போர்வைக்குள் விஷ்ணு சிலை புனித முறு முருகன் சிலை
பார்வைக்கு எட்டாமல் பவுத்திரமாய் வைத்திருந்து
யாருமிலா வேளை பார்த்து ஆசையுடன் தோத்தரித்து
காருமெமை என்று கண்ணீரால் பூசை செய்வர்
சொல்லிலே இரணியன் பேர் சொன்னாலும் மனதினிலே
வல்ல பரன் நாமம் வாயார வாழ்த்திடுவார்
வெளியிலே இரணியனே வேத முறை இறைவனென்பர்
பழி வரதோ இவனை பாதாளம் விழுங்கிடாதோ
என்று ஏங்கி வாடி எல்லாரும் மனதுக்குள்ளே
கன்றிக் கனன்று கடவுளை நொந்திருந்தார்.

## 13.- அரண்மனைக்குள்ளே.

நகையும் சதையும் போல் நல்மணியும் ஒளியும் போல்
தகையான அன்றில் இரண்டு வாழ்ந்து சுகிப்பது போல்
இரணியனும் அன்னான் இளங்கொடியாள் மாதேவியும்
மரணம் வரினும் மடியா மனதுடனே வாழ்ந்திருந்தார்
ஈருடலும் ஓருயிராய் இருவர் நோக்கொரு நோக்காய்
தேரும் குதிரையுமாய் தினகரனும் பேரொளியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வருநாளில் வரு விரதங் காத்திருந்தார்
தாழ்ந்து விடா வண்ணம் தற்பரனைப் போற்றி செய்வார்
கோயில் வலம் வந்து கும்பிட்டுத் தெண்டனிட்டு
ஆயுள் மட்டும் உனைப்போற்ற அரியவரந்தாருமென்பர்
மாலை வணங்காமல் மறுவேலை செயமாட்டார்
காலை எழுந்தவுடன் கண்ணனையே தியானிப்பார்
இந்த விதமாக இருந்த இரணியனும்
பந்தமறுத்த பரன் பாரில் வரமீந்த பின்னர்
கோயில் குளமில்லை குலதேவதை இல்லை
வாயில் கடவுள் நிந்தை மனமெல்லாம் அகங்காரம்
நோன்பு விரதமில்லை நொடிக்குப் பல எண்ணம்
வான்புகழத்தன்னை வல்லவனுக்கும் எண்ணம்
தன் மனைவி வணங்கும் தயாளன் சிலை தகர்த்து
என்னையே பூசி என்று ஏக சட்டந்தானிட்டான்
அன்பரே பூபதியே அழகொளிரும் மாமன்னா
என்னதான் ஆனாலும் இறைவன் ஆகலாமோ
கூடாத எண்ணம் குறைவாவோம் இது திண்ணம்
வாடாத மலருண்டோ வையகத்தில் கூறுமையா
விட்டுனுவே நம் தெய்வம் விழலாகப் பேசலாமோ
விட்டிடுவீர் இவ்வெண்ணம் வீணில் பழியேனோ
என்று பல கூறி இரந்து கதறினாலும்
குன்றெனவே நிமிர்ந்து எக்குறைகள் வந்திடினும்
மாலைச் சிவனை மற்றுமுள்ள தெய்வங்களை
வாலை வெட்டி வழியனுப்பி மறுவேலை பார்த்திடுவேன்
என்று பல கூறி இறுமாந்து வாழ்ந்ததினால்
ஒன்றான வாழ்க்கை ஒடிந்து விழுந்ததம்மா
வாயடங்கிப் பெண்ணாக ஏன் பிறந்தோமென அழுது
காயமுருகக் கலங்கியே வாழ்ந்திருந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. தேவர்கள் முறையிடல்.

சிவனுர் கொடுத்தவரம் சித்திக்கச் சித்திக்க
அவமாக இரணியனும் அடங்காத வீறு கொண்டு
தெய்வ நிந்தனை செய்து தேவபழி கொண்டதனுல்
உய்ய வழிதேடி ஒரு கணமுந் தரியாமல்
முக் கோடி தேவர்களும் மூவர் முதல்வர்களும்
நக்கீரர் குறை தீர்த்த நல்ல முருக வேளும்
கற்பூரப் பிள்ளையாரும் கந்தர்வர் கின்னரரும்
அற்புதமான நந்தி அழகொழிரும் லட்சுமியும்
நாவில் சரஸ்வதியும் நலமான வயிரவரும்
பாவிற் கடங்காத பரமனுர் வரங் கொடுக்க
நிந்தனைசெய் இரணியன் நீள் கொடுமை தானடக்க
வந்தனை செய்து மாயவனைத்தான் பணிந்து
பாற்கடலில் பள்ளி கொள்ளும் பாராளந்த மாயவனே
போற்றுத நாளெல்லாம் பிறவாத நாளன்றே
கல்மலை தானெடுத்த காயம்பூ மேனியனே
வல்ல அரக்கர் தமை மாயமாய்க் கொன்றவனே
சொல்லில் அடங்காத சோதியே சோதிமிளிர்
வல்ல திருமாலே மாயவனே கேசவனே
பாரப்த போர் முடித்த பச்சை நிற மேனியனே
வாரணத்துபதேசித்த வலம்புரிச் சங்குடையாய்
பத்தவதாரஞ் செய்ய பருவமிங்ஙுமாகலையோ
எத்தன் இரணியனின் இடர் உமக்கு எட்டலையோ
தூது சென்ற சிறு பாதம் துவள வந்தெமைக்காரும்
மாது இலட்சுமியை மறந்து துயில்வதேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. நரசிம்ம அவதார ஆரம்பம்.

தேவர்கள் அழுத கண்ணீர் தேடி வணங்குமடியார்
மூவர்கள் தொழுத கண்ணீர் முறையிட்டழுகும் மற்று
பாவையர்கள் கண்ணீர் பாரில் அடியார் கண்ணீர்
நர்வை அடக்கி நலிந்துழல் வோர் கண்ணீர்
இத்தனையும் பார்த்த ஏந்தல் திருமாலும்
தத்துவம் உணர்ந்து தன் நிலையைத் தானுணர்ந்து
பித்தன் இரணியனால் பிழை வந்த விதமறிந்து
எத்தன் அவனை இரண்டாகப் பிழப்பதற்கு
சித்தமது கொண்டு சினங் கொண்டு தேவர்களை
மெத்தக் குறையுணர்ந்தேன் மீள்க உம்மிடமே
இறையை மதியாத இரணியனை அடக்கி இந்த
மறை உலகில் பரம்ப வழிகள் வகுத்திடுவேன்
குறைகள் அகற்றிடுவேன் குணம் பெருகச் செய்திடுவேன்
நிறைவுள்ள பக்தர்களின் நீள்துயரம் போக்கிடுவேன்
என்று பலகூறி இகமழந்த மாயோனும்
நன்று இந்திரனே நலமான மனு உருவாய்
இன்றே இரணியனின் எழிலான மகவாக
மன்றுள் இறை துதிக்கும் மாதேவி தன்வயிற்றில்
சென்று பிறப்பாய் சீர்பலவும்பெறுவாய்
நன்று என் நாமம் நாவினிக்கக்கூறிடுவாய்
இரணியனை மதியாது எல்லுமம் கூறிடுவாய் 275536
மரணத்தை மதியாதுமால்நாமம்கூறிடுவாய்
கொன்றாலும் குறையாமல் கோவிந்தா என்றிடுவாய்
வென்றாலும் என்நாமம் மிகையாகக்கூறிடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வழி அனுப்பி இரணியனைக் கொல்வதற்கு
அன்று கஞ்சனுயிர் அகற்றித் துயர் தீர்த்த
காளிங்கன் தலையில் கடு நடனந் தானிட்ட
ஆழி துயில் மாலும் ஆவலுடன் காத்திருந்தார்

## 16. பிரகலாதனன் பிறப்பு.

திதியும் லக்கினமும் திவ்வியமாய்ச் சேர்ந்த தொரு
மதி திகழ் நன்னாளில் மாலின் ஆணை கொண்டு
துதி பாடித்தேவர் கோன் தூய மனம் கொண்ட நல்ல
சதியான மாயாதேவி தன் வயிற்றில் கருவானார்
எண் திசையும் போற்றும் இரணியனின் புத்திரனாய்
மண்ணுலகில் பிறந்து மாயவனின் கட்டளையை
கண்ணணின் கட்டளையை கார்வண்ணன் கருத்தினையே
எண்ணற் கரிய கண்ணன் ஏற்று மகிழ்வுடனே
நண்ணிய நாளில் நலம் பல சேர்ந்ததம்மா
வண்ண முகில்கள் வளம் பொழியப் பெய்ததம்மா
கரும்பு முத்தீன்று கடல் முகத்தில் பொன் கொளிர
விரும்பும் அடியார்மேனி மெய் சிலிர்த்துக் காட்டிற்றம்மா
அரும்பு மலர்ந்து அக்கணமே கனியாகி
இரும்பு சிதைந்து இனிய பைம்பொன் ஆனதம்மா
மாதர் தம் மேனி வலியாகி உடல் மெலிந்து
வாதனையுற்று மகிழ்வு மிகக் கொண்டதம்மா
வேதங்கள் முழங்க மென் காற்று மிக வீசி
காதமெலாம் பரந்து காதெங்கும் நுழைந்ததம்மா
அடைத்திருந்த ஆலயங்கள் ஆவென்று சப்தமிட்டு
படைக்கலதோர் நடுங்கப் பரமனைக் காட்டிற்றமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை யெலாந்தாண்டி தாமரைக் கண்ணனொளி
கடையேற்குக் கிட்ட கருணை பொழிந்த தம்மா.
இந்த அதிசயத்தை இரனியனும் பார்த்திருந்து
எந்தத் துன்மார்க்கன் இச்செயலைச் செய்தவனோ
வந்து என் காலடியில் வாயமுது வீழாவிடில்
தந்தம்பறக்கத் தண்டாலே அழுத்திடுவேன்
என்று பலகூறி இறுமாந்திருக்கையிலே

அன்றே இந்திரனும் அவன்மகனாய் உருவாகி
புல்லுக்குள் நெல்லு புதுமைபெற்று முளைத்தவாறு
சல்லுக்குள் தாமரை தளிர்விட்டெழுந்தது போல்
காஞ்சிரை மரக்காவில் கனசந்தனத் தருப்போலே
கிஞ்சல் குடும்பத்துள் கிளர்ந்தெழுந்த உத்தமன் போல்
வந்து பிறந்திடவே வாய்மையுள்ள இராணியிடம்
அந்தம் புகழ அருஉருவாய்த்தான் நுழைந்து
முதலாம் மாதம் முகமெலாந் தான்சிவக்க
பதமான உணவும் பாவைகண்டால் வாந்திவர
மதமான உடம்பும் மளமளத்துதான்வாட
விதமான உணவினிலும் விருப்பு இல்லாதவளாகி
இரண்டாம் மாதம் இடர் கொண்ட உடம்பாகி
திரண்ட தனங்கறுத்து திருமேனி நொய்ந்திடவே
மூன்றாம் மாதம் முன்வயிறு துவண்டிடவே
ஊன்று கிழவி போல் உதிரமெலாம் தான்வற்றி
நான்காம் மாதம் அரிவை உடல் தான் மதர்த்து
பைந்தமிழ்போல் அழகுற்று பாரமுள்ள வயிறாகி
ஆறும் மாதம் அழகு முலை தான் பெருத்து
வாறான உடலும் வடிவு பலதானெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் மாதம் இளைப்புள்ள மாதாகி
தாழாத பசியும் தண்ணுறக்கமும் பெருகி
எட்டாம் மாதம் இடையெங்கும் வயிருகி
முட்டென்ற மூச்சுடனே முகமெல்லாம் தான் மறந்து
ஒன்பதாம் மாதம் உதரத்தில் மைந்தன் உதை
அன்புடனே பட்டு ஆசை மிகப் பெருகி
பத்தாம் மாதம் பாவை மிக மிக நொந்து
உத்தமனுய் ஓர் குழந்தை உவகைமிக ஈன்றனளே

## 17. இரணியன் மகிழ்வு.

பாலன் பிறந்த சேதி பாரெங்கும் பரவியதே
தாலாட்ட மாதர் தாளமிட்டுப் பறந்தனரே
சீராட்ட மாதர் சீர் கொண்டோடி வந்தார்
ஓராட்ட மாதர் உவகையுடன் ஓடி வந்தார்
பாராட்டப் பாவலர்கள் பாட்டிசைத்து வந்தார்
நீராட்ட முதியோர்நிமிர்ந்தெழுந்துச் சூழ வந்தார்
இந்த விதமாய் ஏழுலகும் போற்றிடவே
வந்து பிறந்தானே வாய்மையுள்ள நற் குழந்தை
தந்தைத் இரணியனும் தான் செய்தி கேட்டோடி வந்து
என் தவமே பொற் கொடியே எழிலுருவ மேனியனே
மூன் தவமே முத்தே மூவுலகு ஆழ்பவனே
பின் தொடரும் படையின் பெருமை மிகு தளபதியே
என் கலி தீர்க்க வந்த எங்கள் குல நவமணியே
மன்னர்கள் பணியும் மாவண்ணு என்ருடி
உற்றுமே பார்த்தான் ஒடுக்கிய கண் திறந்து
சுற்றியே பார்த்தான் துள்ளிக் குதித்தாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அமுதே இரத்தினமே இன்பமே வாடாவென
புன்னகை தவளப் புத்திரனை அணைத்தெடுத்தான்
பொற் கன்னஞ் சிவக்கப் பொழிந்தானே முத்த மழை
மற் போர் செய்வது போல் மழலை கால்கை ஆட்டிடவே
அற்புதம் அற்புதமே அனைவரும் ஓடி வாரும்
தற்பரனை அழிக்க வந்த தங்கச் சிலை பாருமென்றான்

## 18. இரணியன் வெறுப்பு:

அம்மா எனக் குழந்தை அலறிப் புலம்பிடவே
எம்மான் இரணியன் போல் அவன் காதில் பட்டிடவே
அம்மாடி என் குழந்தை அழும் போதே என்னுமம்
இம்மாதிரிக் கூறுவது எந்தனுக்கும் ஏற்றதேயாம்
என்று மிகக் கூறி இறுமாப்புடன் அணைத்து
நன்றான பாலா நாவினிக்க இன்னுமோர் தடவை
என்னுமம் கூறு கண்ணே என்று இழுத்தணைக்க
உன்னுமம் கூறேன் உலகழிய வந்தாலும்
பாராளும் படைகள் பல திரண்டு வந்தாலும்
நாராயணன் நாமமின்றி நவிலேன் வேறு நாமம்
பாராய் என்பது போல் பசுமை மிகு வாய் திறந்து
நாராயண நம வென நல்லதோர் ஓசையிட்டு
சீராகச் செப்பியதும் சினந்து இரணியனும்
நாரயணனுமம் நாராசமடா என் செவிக்கு
என் நாமம் அன்றி எவனும் அவன் பொன்னுமம்
என்னுளும் உரையாத இவ்விடயம் தெரியாத
பாலகா உன்னைப் பாரில் மன்னித்தேன்
ஆலகால நாமமதை அவனியிலே கூறுதே

UNIVERSITY OF CEYLON LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுமம் அன்றி வேறெவர் நாமமேனும்
உன்னியே கூறினல் உன் குலத்துக்கேற்காது
பாராளும் நாமெங்கே பரதேசி அவனெங்கே
நாரயணு நாமம் நம் குலத்துக் கேற்காது
சிவனுரின் நாமம் நம் சீருக் கேற்காது
அவன் மக்கள் நாமம் நம் அந்தஸ்த்துக் கேற்காது
என்று பல கூறி இரந்தானே அப்பித்தன்
அன்றே சோதிடரை அழைப்பித்து ஆருடம்
நன்றே பாருமென நகை மிகவே கூறிடவே
குன்றும் அவனுயுள் குறுகும் அவனரசு
மறையும் அவன் மமதை மாறும் அவன் வாரிசு
அறைதல் அவர் கேட்டு அவனுக் கெடுத்துரைக்கப்
பயந்து மாமமன்ன பாருக்கதிபதியே
உயர்ந்த தேவர்களும் உவந்து தொழும் பேரரசே
இப்பாலன் உந்தனிலும் உயர் வாகத் திகழ்த்திடுவான்
தப்பாமல் உன்னரசின் தகை மிக உயர்த்திடுவான்
இப்பாருள் உள்ளளவும் உன் பெயரொழியாமல்
அப்பா பேரழியாமல் அவர்க்கு நன்மை சேர்த்திடுவான்
காலமெல்லாம் அதிபதியாய் கனநாளாய் ஆட்சிசெய்வான்
கோலமிட்டு குங்குமத்தால் குன்றெனவே திலகமிட்டு
பாலகனுக்கு இன்றே பாரிலுள்ளோர் போற்றிடவே
சீலமுள்ள நாமமதைச் சீருறவே சூட்டுமென்றூர்
உள்ளம் உருக உவகையுடன் பாலகனை
மெள்ள எடுத்து மெய்யே என் ஐயா என்று
கள்ளப்பயலே நீ கண்ணனுக் கெதிரியாகி
மெள்ள அவன் சிரத்தை மென்னியுடன் திருகிவாடா
சீருள்ள நாமம் செகம் போற்றும் நல் நாமம்
பேருள்ள நாமம் பிரகலாதன் பேர் நாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேருருட்டி வருகையில் தெருவெங்கும் உன் நாமம்
போருருட்டும் போதினிலே புகழ் வீசும் உன் நாமம்
எந்தனுக்கு எதிரி இவ்வுலகில் யாருமில்லை
கந்தனும் கணபதியும் கடுகிப் பயந்து விட்டார்
சிவனும் தேவர்களும் செத்தோம் பிழைத்தோமென்றார்
அவமானமுற்ற தேவர் தொகை அனந்தம் அனந்தமடா
ஆயர் குலம் வளர்ந்து ஆயர் பலர் துதிக்கும்
மாயன் ஒருவன் என்னை மதியாதிருப்பதனல்
பாரளந்த மாயவனைப் பாற்கடலில் பள்ளி கொள்ளும்
சீரளிந்த மாயவனை சிறுவா நீ சென்றடக்கில்
சித்தம் மிக மகிழ்வேன் சீர் பலவும் உனக்கீவேன்
உத்தமனே என் மகனே உனக்கு நிகர் யாருண்டோ
இவ்வாறு கூறி நிற்க இந்தேவன் பிரகலாதனன்
எவ்வாறு கூறிடுவேன் உன் நாமம் எந்தன் ஐயா
கொவ்வையிதழ் கண்ணன் குறுந்தடியால் பகை கொண்ட
செவ்வாய் நாராயணனே செகத்தில் நம என்பது போல
திவ்விய இதழ் திறந்து தீங்கனிச் செவ்வாயினலே,
அவ்விய அமிர்தமென அழுமந்த ஒலி எழவே
கேட்டிடவே பாலகனை கீழே பொட்டனவே
போட்டுடனே வேகமதாய் யோனிராணியிடம்
என்னை மதியாத இந்தக் குழந்தை பெற்ற
உன்னை ஒழித்தே உறங்குவன் பாரடிதான்
என்று இடிபோல எதிரொலிக்கப் பேசிடவே
துன்று துரையே துயர் தீர்க்கும் என்மணளா
உந்தனையே தெய்வ மென்று உவந்து பெற்ற இப்பாலன்
எந்த விதம் தூசிக்கும் இறைவா பொறுத்திருந்து
பாரும் என் நாதா பார்தனிலே உன் நாமம்
சீரும் சிறப்புமுறச் செழித்திடுமே செகம் புகழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. பிள்ளையோ அல்லது கொள்ளையோ?

ஆகாசம் பார்த்து அருகு எங்கும் தான் பார்த்து
வாகாய் தலைநிமிர்ந்து வடிவுடனே தாய் முகத்தை
பாகாகப் பார்த்துப் பாலருந்தி தவழ்ந்தோடி
சாகாவரம் பெற்ற இரணியன் மடியேறி
துள்ளி விழுந்து துடி நடையாத்தான் நடந்து
பள்ளி செலும் பருவம் பாலனுக் கெட்டியதும்
வேதமுணர்ந்த விறல் தெரிந்த விற்பனரின்
ஓதல் முறை கணித்து ஓம் எனவே தான் தொடங்க
மாதர்கள் சூழ மன்னவர்கள் புடை செறிய
தாதரும் மற்றவரும் தான் சூழ ஒரு தினத்தில்
உருத்த பனையோலை உன்னதமாய்க் கிழித்து
குருத்துப் பனையோலை குரு வணக்கமாய்க் கிழித்து
கருத்துடனே கல்வி கனகமணி மார்பனுக்கு
அருத்தமுடன் கூறி ஆரம்பித்து வைத்திடவே
இமயமலை முனியும் இளந்தென்றல் பொதிகமலை
அமயத் தமிழ் முனியும் ஆருடப் புலியான
சமயமுணர் முனிவர் சாத்திரத்தில் பேர் போன
உமையவன் வரம்பெற்ற ஒங்கார மாமுனிவர்
எல்லாரும் கூடி ஏந்தல் பிரகலாதனனுக்கு
கல்வி சொலும் நாளில் கவிதை மழை பொழிந்திருந்தார்
தும்பைப் பூப்போல தூயவெள்ளை ஆடை கட்டி
செம்மையுறப் பூணூல் செப உத்திராட்சம் தரித்து
சம்மானுருவமென்ன எழிலான வியாசரென
அம்மான் வசிட்டரென அழகு நடை நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஒருமுனிவன் வாழ்த்துரைத்து வருபொருளை
முந்தி நினைந்து முகமெலாந் தான் சிவக்க
சந்ததமும் மறைத்துத் தான் செய்யும் தப்பிதத்தை
எந்தாய் மன்னியென ஏகனைத்தான் வணங்கி
இரணியனை நினைப்பவன் போல் ஏகநிலை தானடைந்து
தரணிதனில் விழுந்து தற்பரனே போற்றியென
மரணமண்டாமன்னனடி வையகத்தில் அபயமென
வரம்பெறுவான் போல் மலர்தூவிப் பூசைசெய்து
மன்னன் மதலைதன்னை மடிமீது எடுத்துவைத்து
இன்னல்தீரும் குழந்தாய் இரணிய நமவென்றால்
சென்னெல் செழிக்கும் செகமெலாந்தான் சிறக்கும்
அன்னம் பெருகும் அறிவு கலை தான்பெருகும்
இரணிய நமவென்று எந்நேரமும் சொன்னால்
மரணபயமில்லை மாண்டு மடிவதில்லை
அரனும் அயனும் ஆயிரம் தேவர்களும்
பரமன் எனப்போற்றும் பார்புகழும் பேர்நாமம்
இரணிய நமவென்று இனியவாய் திறந்தோது
தரணி புகழ் நாமது அதனைப்புகழ்ந்து தோது
என்று முனிகூறி இரணியா நமவெனவே
அன்று அன்று அஃது பிழை அவனியெலாம்புகழ் நாமம்
துன்று துயர் தீர்க்கும் தூய தொரு நாமம்
என்றுமுள நாமம் நாராயணா நம என்றான்
எரிதணலில்எண்ணெய் எடுத்து வாரினாற்போல்
புரி அறுந்த கயிற்றில் புயல்வந்து மோதினாற்போல்
வரி விழுந்த புலிமேலே வலி அம்பு பாய்ந்தாற்போல்
அரி என் நாமம் அவன் காதில் விழுந்திடவே
பாய்ந்தெழுந்து பல்லை படபடவெனக் கடித்து
காய்ந்தசருகுபோல் கனசபையோர்வெருண்டோட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்து சிலர்விழவே சரிந்து சிலர்துடிக்க
மாய்ந்தோம் மாய்ந்தோமென மன்னர்பலர் நடுங்க
புருவம்துடிக்கப் புயமிரண்டும் படபடக்க
உருவம் பெருத்து உதடு தடதடக்க
கருவிழிகள் சிவந்து காலால் தரை உதைத்து
திருடன் பேர்சொன்னவனை திருமாலெனும்பேதை
திகழ் நாமம் சொன்னவனை திருகியே கொன்றிடுவேன்
புகழ்நாமம் கூறியஇப்புத்திரனைப் பாரினிலே
அகழிதனில் அமிழ்த்தி அரிய உயிரெடுப்பேன்
மகனென்றும் பாராமல் மாய்த்து மடித்திடுவேன்
பிள்ளையல்ல இது என்னுயிர் மாய்க்கவந்த
கொள்ளையல்லோ என்றுகுதித்து குறைபட்டு
அள்ளி அப்பனென அழைப்பேனென்று நினைத்திருந்தேன்
கொள்ளிவைக்குமென்று குறையும் தீர்ந்திருந்தேன்
அப்பன் பெயர் அகிலம் புரக்குமென்றும் அனைத்தும்
முப்புரமும் ஆளும் மூவர்களும் அடிமைகொள்ளும்
தப்பியமன்னர்களும் தம்சிரசு வணங்கிடுவார்
எப்போதும் என்பேர் இவ்வுலகில் நிலைக்குமென்று
எண்ணியதெல்லாம் மண்ணாகப் போச்சுதடா
கண்ணென்று நினைத்திருந்தேன் விண்ணாணம்பேசுதடா
நண்ணியே உன்னுயிரை நான்குடியாவிட்டாலோ
மண்ணாளும் இரணியன் என்பது என் பெயரில்லையடா
என்றுதுடித்து எழும்பி கைதுடைத்து
கன்றும்பால்நின்றிருந்த கண்ணன் பெயர் தரித்திருந்த
நன்றுநினைந்திருந்த நற்பிரகலர் தனன்மேல்
குன்றெனவே வீழ்ந்து குழந்தை என்பதைமறந்து
மல்யுத்தவீரனென மார்தட்டி நின்றிடவே
மெல்லிய பாதமுள்ள மழலையும் சிரித்துநின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உலகும் ஏற்றும் நாரயணு நமவெனவே
கொல்லவந்த இரணியனும் குணம்மாறி பித்தனுனுன்

## 20. பிரகலாதனனுக்கு புத்திமதி கூறல்

ஓடிவந்து தாய்தடுத்து உளங்கனியத்தானணைந்து
ஆடிவரும்கண்ணே ஆகாது ஆகாதடா
மாடிமீதிருக்கும் மன்னர்குலம் நாமெங்கே
நாடிமாடுமேய்க்கும் நாரயணன் அவனெங்கே
ஆயர்குலம்வளர்ந்த அங்கைதனில் வெண்ணையுண்டு
மாயனை அவன்புகழை வாயாலும் சொல்லாதே
நாயன்மார் போற்றும் நானிலத்தோர் தமைஅடிமை
பாயல் கொண்ட உன்தந்தைநல்நாமமே கூறிடுவார்
என்று பலகூறி எடுத்தணைத்த போதினிலே
நன்று நன்று சொன்னீர் என நகைத்து மாதாவே
என்றும் கரும்பு கரும்பன்றிப் புல்லாமோ
மன்றுள் இறைவன் மனிதன் எனல் சரியோ
படைக்கமுடியா மனிதனைப் பரமன் எனலாமோ
உடைக்கமுடியா மதிலை உயர்மலையெனலாமோ
இடைசிறுத்த எந்தாயே என்னுயிர்தான் போனாலும்
படைகள் எதிர்த்துவந்தாலும் பாருளோர் பகைத்தாலும்
இறைவன் பெயரன்றி எப்பெயரேனுங்கூறேன்
மறைத்தலைவனுக மானுடனை உச்சரியேன்
நறையோடு தண்ணீரை நான்சமமாக வையேன்
கறைபடிந்த மானுடனைக் கடவுளென மதியேன்
அம்மா பொறுத்தாலும் அருமைமிக அப்பாவே
உம்மைஎன் தந்தையென உயர்வுகொள மதித்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப் பீடிக்கும் நற்பாசம் அகலுவிக்கும்
இம்மை பிணிதீர்க்கும் இறைவன் எனமதிக்கலாமோ
ஆயிரம் உயிர்களேயே அரைநொடியில் மாளுவிக்கும்
மாயவலியுள்ள உம்மால் மாண்டவரை எழுப்பலாமோ
தாயினைப் போலேதற்காக்கும் இவ்வுலகில்
ஆயிரத்தில் ஓர்உயிலரை அணுவளவாவது ண்டாக்க
வல்லமை உண்டா மாபிதாவே கூறுமென
புல்லனே உயிர்கள் புல்லைப் போலதானெழும்பும்
எல்லாம் கடவுள்செயல் என்றால் எனக்கேன்டா
வல்லமை உண்டு பண்ணி வைத்தானடா அவன்
என்று கூறிசிற்றறிவா சிறுவா மண்டலத்துள்
நன்று என்பெயரை நமஎன விட்டாலோ
துன்று சிரசு துடிக்கும் உன்உடலம்
குன்றும் உன்ஆவி கதறும் உன்மனசு
பொறுத்தேன் இப்பிழையைத் தபபிப்போஎனக்கூறி
ஒறுத்து நடந்தான் உளம்வெதும்பி இரணியனும்
மறுத்து நான் கூற மடையனே என்பதுபோல்
சிறு புத்திஉள்ளோனைப்பார்த்து நகைத்தான் பாலகனும்

## 21 தாயின் துயரம்

உண்ணுள் உறங்காள் ஒருபொழுதும் மகிழ்விலாள்
கண்ணீர் பொழியக் காதல் மிகப்பெருக
நண்ணும்விதி நினைந்து நாடிமேல் கைவைத்து
அண்ணுந்தழுது அலறிப் புலம்பியேதான்
வாடிஇருந்த வடிவுதனை ஓடிவந்த
ஈடிலாத புதல்வன் இரணியன் தன்சிசுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி உயிர்வணங்கும் கோபாலன் தன்பெருமை
நாடிவந்த தேவர்கோன் நாமப் பெயர் கொண்ட
பிரகலாதன் பார்த்து பேதை நிலைஅறிந்து
அறிவுள்ளமாதாவே ஆசைதீர் அம்மாவே
புரதலத்தில் இத்துயரம் பொருந்திடக் காரணமே
தரமறியாப்பாலனிடம் தானேஉரையுமென
மகனே!கண்மணியே மாசில்லா மாமணியே
தகப்பன் உனைவெறுக்கத் தாளாத துயர்கொண்டேன்
இகத்தில் இத்துயரம் எந்தனுக்கு ஏன்படைத்தான்
அகத்தில் கொண்ட துயரம் ஆறுகப்பெருகுதடா
பாரில்லுள்ளோர் யாரும் பார்த்தவுடன் நடுங்கிச்
சீருடையதேவே செகம்புகழும் முதல்இறையே
காருமெமை என்று கைகூப்பித் தொழுதேத்தி
தாருமைய வரம் தருமகுண இரணியாவே
நமவென நாமமதை நாலாயிரம்தடவை செப்பி
தமருடனே செல்வம் சகலமுமே பெற்றுநிற்க
என்போலே உன்பிதாவை எள்ளளவும்நினைக்கலாமோ
அமர்வாக மகனே ஆய்ந்து நீ கூறுமடா
அன்னையும் பிதாவுமல்லோ முன்னெறிதெய்வமடா
மன்னன் மகனே மதலைபொழி என்செல்வமே
சின்னவயதுடைய சிங்காரப் பொற்சிலையே
தந்தை சொல்மிக்கதொரு மந்திரம்இல்லை அல்லோ
இரணியநம வென்றால் என்னதான் தீமையடா
மரத்ததோ உன்னெஞ்சம் மாறியதோபுத்திபலம்
இரந்தேன் என்மகனே இரணிய நமஎன்றிடுவாய்
பரன்தந்த செல்வமேநான் படுதுயரை அகற்றிடுவாய்
தந்தை உனை மெச்சிடுவார் தாமதமே செய்யாதே
எந்தன் மகனே இளம்சிங்க வலியுடையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்ததடா என்மனது நோகுதடா என் இதயம்
சந்தோஷந்தாடா தருமதுரை என் வங்கிசமே
என்று அழுது இளங்கரங்களைப் பிடித்து
துன்று துயரம் தீர்க்காயோ என்றழுதாள்

## 22. ஊர்க்குருவி பருந்தாமோ

அம்மாவே தாயே அழாதே நான் செய்தபிழை
சும்மாலேத் துருத்திபோல் கன எரியை மூட்டியதே
வப்பாக முடிந்ததுவே வலிமைமிக்க எந்தையர்க்கு
அம்பாகப் பாய்ந்து அதிகோபம் மூட்டியதே
ஆனாலும் அம்மா அன்புமிக்க தாயாரே
தானாக என்மனது தப்பு என்று எண்ணவில்லை
கோனாலும் குடியாலும் குவலயத்துளோராலும்
வானாலும் வழியாலும்வலிமைகொண்ட நீராலும்
எல்லாப்படியாலும் எந்தை பெரியவராய்
சொல்லலாம் அம்மா சோர்வென்றும் நேராது
வல்லபரமனுடன் வலிமைதனை ஒப்பிடுதல்
நல்லதோ அம்மா நானறியேன் கூறிடுவாய்
ஆக்கவல்லான் அழிக்கவல்லான் அகிலமுழுதுமொன்றாய்
காக்கவல்லான் இறைவன் அவனுக்கவன் நிகரே
தாக்கும் வலிமை கெட தந்தை இறைவனென்றால்
ஆக்கட்டும் ஓர் எறும்பை அழித்துமறுகணமே
இக்கணமே அப்பாவை இறைவன் எனத்தொழுவேன்
நீக்கமறப் பரமன்என நினைந்தழுது வணங்கிடுவேன்
நாக்கினால் உரைத்தால் நல்லதெல்லாம் நடந்திடுமே
நோக்கற்றபரமனாக நுதல்படைத்தல்வேண்டாவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
கயல்துள்ளி வான்பாய்த்து கணமழையும் பெய்வதுண்டோ
தயவுள்ளமாதாவே தனயனுக் குரையுமம்மா
பயந்து தொழுவதினுல் பரமன் பதம் கிட்டிடுமோ;
மனிதன் இறைவனுகும் மாயமெலாம் மமதையம்மா
புனிதன் திருமால்போல் புவியாழ்வோன் ஆகிடவோ
இனியும் இரணியனேநமவென உரைத்தல் நன்றே
கனிவுள்ளமாதாவே கணத்தில் உரையுமென்ருன்
அழிவில்லாப் பரமன் அகிலத்துக்கே முதல்வன்முன்
குழிமுயல் போல் தந்தை குறுகி மடிந்திடவோ
இழிவுள்ளகாலம் என்றும் உறுதியம்மா
பழிகொள்ளல் ஏனே? பரமனைத்தூசித்தே
வரம்பெற்ற தந்தைவாழ்வு நீடிப்பதற்கு வளமாக
தரம் கொடுத்ததாரோ தமியேனுக் குரையுமம்மா
கரம் நீட்டிக் காத்த திருமாலேயன்றி
உரம்பேசும் இரணியனே உண்மைஎனக்குரையும்மா

## 23.பதியோ பாலகனே

என்று பிரகலாதன் எடுத்தெடுத்தியம்பிடவே
குன்ருன மனமும் குலைந்து மண்மேடாகி
நன்று என்மகனே நாராயணனுக்கு எதிராய்
இன்று உன்தந்தை எதிரும் புதிரானுர்
உன்வார்த்தை தனிலே உண்மை இருக்குதடா
என்மனதில் பதிபாசம் இறுகப்பிணைந்ததடா
மன்னர்க்கிடையே வாழ்வதோ என் பதிசேவை
உன்னும் மனது இன்று உருண்டு பிரழுதடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் உரை கேட்டு உண்மைதனை உணர்ந்தால்
எந்தன் கெதிஎன்ன என்றேங்கி மடிகின்றேன்
சந்திர மதி வதன தண்ணொளி வீசு முகா
சுந்தரனே உன் கெதியும் என்னதான் ஆகிடுமோ
பாலகன் ஒருபக்கம் பதிபாசம் மறுபக்கம்
காலமெலாம் இவ்வாறு கஷ்டமுறல் என்விதியோ
ஞாலமெலாம் கூருதே நாராயணு நமவென்று
ஓலமிட்டு நீ கூறுவது உத்தமமோ புத்திரனே
இரணியா நமவென்று எல மகனே கூறுஎன்று
அரவணிக்க என் அறிவு அதற்குஇடந் தரவில்லை
மரணத்தில் உனைச் சேர்க்க மறுமனது இணங்கவில்லை
பரனே பரம் பொருளே பாரினிலே எனைக்காரும்

# 24 அதுவே போதும் அஞ்சாதே

யானைக்கிடர் தீர்த்த நல்ல திருமாலே
கோனை கஞ்சனுயிர் குடித்த பெருமாளே
மானுனேன் புலிவாயில் மயிலானேன் சேடன்முன்
தானுக வந்து இடர்தவித்து எனைக்காராய்
இவ்வாறு மாயாதேவி இரந்து அழுவதனைக்
கொவ்வையிதழ்க் குமரன குறுநகையுடன்பார்த்து
அவ்வாறு நினைப்பதொன்றே அம்மா உன்குறை தீர்க்கும்
செவ்வையை நாயன் எமைத் தேற்றி மகிழ்விப்பான்
ஏலாதவொன்றை இயம்பிநீ வாடாதே
மாலாலே துயர்கள் மறையுமது மட்டும்
சாலர்த நாமம் இரணியா நம வென்று
நாலாயிரந் தடவை நீ நன்ருகக் கூறுஅம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்கு நேரம் நினைவு கொண்டு கூறுமம்மா
சாரமற்ற நாமமதை சன்னதமாய்க் கூறுமம்மா
கோரமுள்ள குணம் அகலக் குறையகலக் கோள்அகல
ஈரமில்லாக் கல்னெஞ்சன் இணையுள்ள நாமமதைக்
கூறுமம்மா என்று மதலைமொழியின்பமதை
ஆறும்தினம் வருகும் அன்றுமால் கிருபை வரும்
தேறும்வழி பிறக்கும் தெய்வபலன் சுரக்கும்
நூறு இரணியர்கள் நொறுங்கும் திருநாள் வரும்
என்று பிரகலாதன் எடுத்தியம்பி நின்றிடவே
நன்று என்மகனே நாராயணன் பெயர்மனதில்
வென்று மனம்கல்லான இரணியன்பெயர் உதடில்
இன்று தொடக்கம் இருக்குமடா என்றிசைத்தாள்

## 25. காற்றும் நெருப்பும்

நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாக
ஆளாகிவந்த அருமைமைந்தன் பிரகலாதன்
வாளெடுத்தால் மால்நாமம் மறைபிடித்தால் மால்நாமம்
ஆளஞ்செலில் அவன்நாமம் அகலச் செலில்கரிநாமம்
சொல்லுக்குச் சொல்லு சொல்விடுவான் மால்நாமம்
எல்லார் மனம்படிய எடுத்தியம்பிமால் நாமம்
வல்லான் அவனன்றி மற்றொருவர் இல்லையென
புல்லன் இரணியனை புகழாது தூற்றிடுவான்
கதிர் சூழும் வயலில் கார்வண்ணன் புகழ்கூறி
மதிசூழும் நகரில் மயன்பேர் தான்கூறி
பதிதோறும் மால்திருடி பாம்பாட்டி பேர்கூறி
விதியுடனே பஜனை வெகுவாச் செய்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. கூற்றுவனைக் கொண்டுவா

அஞ்சியிருந்தமக்கள் அரவம்போல் ஆடலுற்றார்
தஞ்சமே தஞ்சமய்யா தாமரை எழில்வாசா
மஞ்சமாம் சேடன்மேல் மாயமுடன் துயில்மாலே
நஞ்சல்ல உன்நாமம் நாமறிவோம் அவுடதமே
என்றுமதித்து இறைவழிபாடு செய்தார்
குன்றாய்உயர்ந்த இரணியனைத் தூற்றிநின்றார்
என்றிமிலாவாறு இசைகீதம் தான்முழங்கி
மன்றுள்மனம் துணிந்து மாபக்தி செய்துநின்றார்
இத்தனைக்கும் முன்னின்றான் இளஞ்சிங்கமென ஒளிர
புத்திரனும் இரணியனின் புகழுடம்பை போக்கவந்த
உத்தமனும் பிரகலாதன் உண்மை உலகறிந்திடவே
சித்தமது கொண்டான் சீர்மால் துணைகண்டான்
எங்கும்மால் நாமம் ஏற்றும்திருநாமம்
பொங்கும் விதமறிந்து புலியெனவே தான்நடந்து
மங்களமய்யா மகனை உன்புதல்வன்
எங்கும்மால் முளக்கம் இனிதாகச் செய்கின்றான்
மானிலத்தில் தெய்வம் மானுடனுகுவனே
தானிது என்றால் தலைபிழையோ நாம் நம்ப
ஆனிரை காத்த அருநாராயணனே இறைவன்
வானின்று வையமட்டும் மாறாத உண்மையிது
இப்படியாக எடுத்தெடுத்து உன் மகனும்
தப்பிதமாய் மக்களினை சாடிவிடுவதினால்
எப்படிநாம் எங்கடமை எதிரின்றிச் செய்திடுவோம்
அப்பனே உரையுமென அக்காவலர்கள் உரைத்திடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வானம் போலச் சிவந்துமுகம் மாற
கொவ்வைப் பழம்போலக் கருவிழிகள் தன்ாசிவக்க
கவ்வுமிடியெனவே கடகடவெனவே அதிர்த்து
எவ்விடமிருந்தாலும் இழுத்தவனைக் கொண்டுவாரும்
என்மனதைப்புண்படுத்தும்எழியவனைக்கொண்டுவாரும்
தன்குலமறியாத தறுதலையைக் கொண்டுவாரும்
என்கூற்றுவனைக் கொண் டுவாரும் குறைசெய்துவருமிந்த
புன்மகனை என்முன்னே பிடித்திழுத்துவாருமடா
சபையதிர அங்கே சபைஇருந்தோர் சரிந்துவிழ
அவை நடுங்க அண்டம் அகிலமெலாம் ஒடுங்க
பகைமுறிந்து அடிவீழக் காணுதபுதுமையென
சுவையற்ற மொழிபேசி சுட்டெரித்தான் இரணியனும்
வீரர்கள் ஓடி வெகுவிடமெலாந் தேடி
நீரருகும் வயலருகும் நெடிதான தோப்பருகும்
பாரருகும் பயிரருகும் பாலைசூழ் வனத்தருகும்
காரருகும் கானருகும் காணுது கால்தளர்ந்து
மரத்தின் நிழலிலே மயங்கிக் கிடக்கையிலே
தரத்தில் உயர்ந்த அத்தாமரைப்பூ மாதவனை
வரத்தின் முதலோனை வடிவாகப் பூசைசெய்யும்
உரத்த ஒலிகேட்டு எழுந்தோடிவந்தார்கள்
மாலை வணங்கும் மாமன்னன்தன் மகனை
ஆலமரநிழலில் அழகாக அமர்ந்திருக்கக்கண்டார்
சோலைநடுவே சுகந்தந்தரு சந்தணம்போல்
மாலைஒளியில் மயக்கந்தரும் சந்திரன்போல்
பாலனைக்கண்டு பயத்துடனே முன் சென்று
ஆலம்போல் தந்தைசொன்ன அரும்பணியைக்கூறிநிற்க
சீலமுள பிரகலாதன் சிந்தைதெளிந்தெழுந்து
கோலமுடன் நடந்து கொற்றவையில் வந்துநின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. மதியாதவனை மிதித்துக் கொல்

சுருங்கிச் சிவந்து சூடேறிய வதனமுடன்
கருங்கிய மீசை கடகடத்துத் துடித்திடவே
நெருங்க யார்ருமஞ்சும் நெடியோன் இரணியனின்
மருங்கில் வந்துநின்று மதலையில் அப்பா என்றான்
உள்ளந் தடுமாறி உதடு துடிதுக்க
வெள்ளை மனக்குழந்தை விளவும் விளக்கேட்டு
கள்ளமில்லா மனமே கருத்துக்கிசைந்த கண்ணே
வள்ளலென் நாமம் வாயினிக்கக் கூறிடுவாய்
என்று இரணியன் இசைவாகக் கூறிடவே
நன்று என்பிதாவே நான் எவ்வாறு கூறிடுவேன்
என்றும் அழியாத ஏகபரன் இருக்கையிலே
என்றோ அழியும் உன்நாமமது துணையாமோ
நீர்மூழ்கும் மனிதன் தான்மூழ்கி மடிகையிலே
கார் என்போர்க்குக் கரத்தைத்தானீயலாமோ சொல்
பேர்போன வீரரெல்லாம் பிரிந்திட்டார் இப்பூமிவிட்டு
யார்இறைவன் என்பீர்இப்போ நவின்றிடும் என்பிதாவே
நாராயணன் பாதமதை,நம்பினவர் கெட்டதில்லை
பாராயணம் செய்வோர் பரகதியே சேர்ந்திடுவார்
காராயென்ற யானைக்கும் கவ்விய முதலைக்கும்
சேராத சொர்க்கமதைக் கொடுத்திட்டான் மாலன்றோ
எந்தையே இக்கதை எல்லாமே பொய்யாமோ
உந்தனை என்பிதாவன்றி உலகினிறை என்பேனோ
தந்தை என்பேனே தவிர தயாபரனென்பேனோ
எந்தனுக்கு எடுத்து இயம்பிடுவாய் என்பிதாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமகன் கூற எடா சிறுபயலே
முன்னின்று கூறவந்த மூடா பெருமடயா
என்னையே தெய்வமென்பேன் எல்லாம் என்கையினிலே
உன்னையே அழித்திடுவேன் ஊமையாய் ஆக்கிடுவேன்
தாரணியே போற்றும் தானென் பெருமை கேட்டு
ஆரணமே வணங்கும் அதிவலிமை தான் கேட்டு
பூரணமாய் எங்கும் பூமிதனில் நிறைந்திட்டேன்
காரணனைக் காக்கும் கர்த்தனாய் ஆகிவிட்டேன்
நீயார் என்முன் நிற்க நிற்பாயோ என்னெதிரே
பேயார்வங் கொண்ட பித்தனே வணங்கிடவே
தாயார் தண்டித்த தறுதலையைப் போற்றிடவே
ஆயர்கள்துதிக்கும் அற்பனைப் போற்றிடவே
சொல்லிக் கொடுத்து ஊரை துன்மார்க்கம்ஆக்கிடவே
பல்லிபோல் என்றாலும் பார்கெடுக்கத் துணிகிறாய்
அல்லிமலர் போல ஆதவனை நம்புகின்ற
புல்லின்குணங் கொண்டு புத்திரனாய்ப் பிறந்துவிட்டாய்
இன்றோடு மால்நாமம் நன்றாக மறந்துவிடு
அன்றேல் என்ன இங்குஆகிவிடுமோ நானறியேன்
மன்றாடி என்நாமம் மனம் நிரம்பிச் சொல்லாவிடில்
கொன்றிடுவேனுன்னை குவலயத்தோர் தானறிய
என்று எடுத்து இயம்பிய இரணியனுக்கு
கொன்றாலும் நான்கூறேன் குவலயத்தில் உன்பேரை
குன்றில் இருந்து குப்புறத் தள்ளிவிட்டாலும்
நன்றாக நாவை நாலாய் நறுக்கிடினும்
கைவெட்டி கால்வெட்டி கனஅங்கமெலாங்குறைத்து
மெய்வெட்டி மேலெல்லாம் வேறுவேறாக வெட்டி
செய்யாததீமையெலாம் செய்தாலும் உய்யவழி
மெய்யாகக்காட்டும் மெய்த்திரு நாமமன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறேனே உன் பேர் குன்றெடுத்தமால் நாமம்
வேறன்றி நான் விளம்பேன் என்றதுமே
தாறேன் இதோ உனக்குத் தகுந்தோர் தண்டமடா
மாறேன் எனறவனை மாநதியில் வீசுமடா
மதியா இவனை மதயானை தன் காலால்
மிதிக்க வைத்தே கொன்று மீள் நரகுக்கு அனுப்பிடுவீர்
குதிக்கும் இப்பயலைக் கொப்பரையில் எரியூட்டி
விதி இதுதான் என்று வெந்தவித்துக் கொல்லுமடா

## 28. சாவனுகா ஆச்சரியம்.

இது என் ஆணை இக்கணமே இடு காட்டில்
கதுமெனவே கொண்டிவனை என் கட்டளைக்கு ஏற்றிடவே
எது செய்யவேண்டுமோ செய்து நீர் வதையுமடா
அது பொறுக்க முடியாமல் இரணியா நமவென்றால்
பூச்சூடி பொட்டிட்டு பொன் ரதத்தில் தானேற்றி
பாச்சூடிப் பாவலர்கள் பாடிவர பல்லக்கு தனில்
வீச்சோடு நகர் சுற்றி நற்பவனி வாருமடா
போச்சு மால் நாமமென்று புகழ் பாடி வாருமடா
என எடுத்த பின்னர் இரணியர்க்கு ஓடி வந்து
கனதுரையே ராசாவே காணாத ஆச்சரியம்
வன மிருகமெல்லாம் மால் நாமம் கேட்டவுடன்
இனம் போல ஏவல்கள் செய்யுதய்யா
மலையிருந்து உருட்டிவிட்டோம் மலைகுனிந்து தான்வளைந்து
முலையூட்டும் தாய்போல முகந்தெடுத்துக் கொண்டதய்யா
அலை கடலில் போட்டோம் அங்கொரு சர்ப்பம் வந்து
கலை கொண்டு போர்த்தி களைப்பு மிகத் தீர்த்ததய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பினில் போட்டோம் நீராகப் போயிற்றய்யா
திருப்பும் திரிகையிலே திரித்தோம் கல் உடைந்ததய்யா
மரப்புள்ள யானை வலம் வந்து போற்றுதய்யா
நெருக்கு முள் சட்டம் நீருகிப் போகுதய்யா
எல்லா வழியாலும் இடர் செய்களைத்தோமய்யா
பொல்லாத விதமாகப் போக்கி உயிர் பார்த்தோமய்யா
செல்லாத காசாக என் செயலெல்லாம் போச்சுதய்யா
வல்லாள கண்டனவன் வலிமை மிகு எத்தனய்யா
என்றது கேட்டு என் கையால் நெரித்து
கொன்றிடவே அவனைக் கூட்டி வருகவென
கன்று போல் திகைத்த காதலனைத்தான் அழைத்து
மன்றத்துள் விட்டார் வாய் நிறையத்தான் சிரித்து
அப்பா பிதாவே அழைத்ததென்ன காரியமோ
தப்பிதங்கள் செய்யவில்லை தருமமே தானுரைத்தேன்
முப்புரமும் கார்க்கும் முன்னவனின் நாமமதை
தப்பாமல் சொன்னது தான் பிழையோ கூறுமப்பா
கூறுமப்பா என்று கூறிய அம்மாத்திரத்தில்
வீறுடனே எழுந்து விழல் பேச்சு வேண்டாமடா
கூறு இன்னொரு தடவை கூற்றுவன் திருமால் பேர்
கீறு கீருக இப்போ கிழித்தெறிவேன் உந்தனையே
மாறிப் பிறந்த பயல் மடப்பயலே என்றிடவே
ஆறி நீர் பேசுமப்பா ஆலிலையில் துயின்றேன்
பேறின்று வேறு பேறென்ன வேண்டுவதோ
நீறில்லா நெற்றிபோல் அவனில்லா மனம் பாழே
உயிரில்லா உடம்பு போல் உரி இல்லா மரம் போல
பயிரில்லாச் சேனை போல் படை இல்லாப் போர் போல
வயிரமில்லா மரம் போல் மகவில்லாப் பெண் போல
உயிரணு வாயுறையும் அரி இல்லா மனிதன் பாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டவல்லான் ஆர்உயிர்க்கும் அன்பு அழிக்கவல்லான்
நாட்டமுள்ள மாலுக்கு நாமடிமை அல்லாது
தேட்டம்சில பெற்ற சிற்றறிவோர் இவ்வுலகில்
ஊட்டமளிக்கும் பரனாய் உயர்ந்திடவே முடிந்திடுமோ
வாரும்பிதாவே மனமது தான் சாந்திசெய்து
தாரும்பிதாவே தாரணியோர்க்கு எல்லாம்வல்ல
சீரும்சிறப்புடைய செந்தாமரை மாலை
கோரும் பூசைசெய்து குறைகள் அகற்றிடவே
உத்தரவு தாரும் உலகோர் உமைபோற்றிடுவார்
பத்தர்கள் போற்றிடுவார் பரமனுமுனை வாழ்த்திடுவார்
சத்தஉலகும் சங்கொலிக்க வாழ்த்திடுமே
இத்தனைக்கும் மாலுன்னை எமனிடம் அண்டவொட்டா
பிரகலாதனனும் பேரொழியின் பெருமைமதனை
அரவில் துயில்வோனின் அரிய குணமதனை
தரமாகக் கூறத் தான்கேட்ட இரணியனும்
கரமதைத்தான் நெரித்து கால்களைத் தானுதைத்து

# 28. அற்பப்பயலே செத்துப்போ

மூட்டாளே தலையில் மூளையில்லாத முழுமடயா
இட்டமுடன் உன்விதியும் இன்றுடன் முடிந்ததடா
பட்டாங்கில் உன்செருவம் பாடோடழிந்ததடா
சட்டங்கள் பேசும் உந்தன் சங்கைக்குரிய மாலின்
வீரங்கள் குலையுமடா விண்ணவர்களும் பயந்து
சூரர்குலம் வந்தெந்தன் சுயரூபம் காண்பாரடா
ஆரம் குலையுமடா அவனியோர், இன்றேஎன்னை
யாரேன்றேறிவார் அற்பனே நீ செத்துமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை பெயர் கெடுக்க வந்த தறுதலையே செத்துமடி
எந்தன் புகழ் கெடுக்க வந்த இடும்பனே இறந்து விடு
வந்தனை செய் எந்தனை இன்றேல் வருந்திடுவாய்
உந்தன் உயிர் என் கையில் உணர்ந்து நீ வணங்கிடுவாய்
அடா பயலே உன் தெய்வம் ஆயர்குலம் வளர்ந்த பயல்
இடா மாடு மேய்த்து கிருட்டினனென பயல்
வடமுவாக்கிளியை மாயையால் தடுத்த பயல்
இடாக்கினி பாலுண்டு இன்னுயிர் மாய்த்த பயல்
எங்குள்ளான் நீ வணங்கும் இடைப்பயல் மடைப்பயல்
மங்கையர் துயிலொழித்த மாயனெனும் மடப்பயல்
நங்கையரோடு கழித்து நடனமிடும் காமுகனை
எங்கென்று காட்டுமடா இடுப்பொடிய அடித்திடுவேன்
வாடா மாயவனே! மாலே! மருள் கண்ணா
கேடாக வந்துவிட்டேன் கிருட்டினனே பூவண்ணா
தேடாத இடமெல்லாம் தேடினேன் உனைக்காணேன்
பாடாத பாடுன்னைப் படுத்துகிறேன் வாருமடா
என்று பல கூறி எங்கிருப்பான் உன் மாலும்
நன்று அவனைக் காட்டு நான் அவனைக் கண்டிடவே
இன்றே உலகு எவன் பெரியன் என அறியும்
கன்றெறிந்து கனியுதிர்த்தோன் கள்ளமெலாந் தானறியும்
காட்டடா அவனை காலில் பிடித்திழுத்து
கூட்டோடு கைலாயம் கடுகி அனுப்பிடுவேன்
நாட்டமிருந்தால் நாராயணனைக் காட்டு
கோட்டை தகர்த்து குடியெலாம் அழித்திடுவேன்
அப்பா பிதாவே அருமருந்தே என அன்பே நீ
இப்போ பேசுவது என்னவென்று அறிந்தேனய்யா
தப்பாக நினையாதே தறுதலை என்றேசாதே
முப்புரமும் காக்கும் முதல்வனைத் தேடுவதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. தூணிலும் இருப்பான்.

காணாத பொருளல்லோ கண்டடையத் தேட வேண்டும்
பேணாத பொருளோ அவன் பேரொளியாய் நிறைந்தவனே
மாணாத மாட்சியுள்ள மால் அரி திருநாமம்
கோணாது குவலயத்தில் குன்றெனவே நிறைந்து நிற்பான்
இல்லாத பொருளையலோ எடுத்தெடுத்துக் காட்ட வேணும்
வல்ல அம்மாயன் வாழாத இடமுமுண்டோ
சொல்லோ அவன் மறையச் சோர்வோ அவன் ஒழிக்க
இல்லாத இடமேதான் இல்லையப்பா இவ்வுலகில்
காணும் பொருளில் எலாம் கர்த்தன் மறைந்திருப்பான்
தோணும் பொருளி'லெல்லாம் தூயோன்மறைந்திருப்பான்
வீணும் பதர்தனிலும் விஷ்ணு தான் நிறைந்து இருப்பான்
வாணாழ்தனில் அவனும் மர்யமாய் நிறைந்திருப்பான்
அண்டம் புகழும் அரி எங்கும் நிறைந்திருப்பான்
கண்டோம் என்பார் தவிர காணோம் என்பாருண்டோ
வண்டு தவழ் மார்பன் மாமலை குடை தோழன்
பண்டுறையும் பாரில் பரந்தே இருப்பானே
என்றது கேட்டு எள்ளி நகையாடி
நன்று நன்று நாராயணன் நல்லதோர் ஏழையடா
துன்றிட ஓரிடமில்லாமல் எங்கும் நிறைந்திருக்க
மன்றில் பரதேசியோ மாபாவி ஏழையோடா
கூறடா மகனே! கூற்றுவன் நானவர்க்கு
நூறுகப் பிழிவேன் சனியன் அவன் ஒழிய
நூறுயிரமிடமுறையும் நூதனப் பயலவனும்
பேருக என் முன்னே இருப்பானோ கூறுமடா
இந்தவுரை கேட்டு இளம்பிரகல்ாதனனும்
தந்தையே இந்தத் தாரணியில் எங்குமுளான்

MICROFILMED
Positive
Negative
Reel No: 11085
Date: 8/11/19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தி நிற்கும் இத் தூணில் முன் கிடக்கும் இத்துரும்பில்
வந்து நிற்பாள் மாயன் மருளாதே காண்பாய் என்ன

## 30. பிழந்தது தூண் அழிந்தது அதர்மம்

தூணில் உள்ளானு துன்மார்க்கன் எனச் சினந்து
வானிறைந்த மாலே வாடா எனச் சவால் விடுத்து
கானில் மான் புலி வாயில் கடிது நுழைவது போல்
தானின்ற இடமிருந்தே தான் உதைத்தான் தூணதற்கு
அண்டம் அதிர அகிலம் கிடு கிடென்ன
பண்டை முப்புரமும் படபடவென இடிய
கண்டங்கள் பிரிய கடல் குமுற மலை சரிய
துண்டான தீவு எங்கும் துயர் போல் ஜலம் நிறைய
வானம் வெடிக்க வாவிகள் தான் சுவற
கானகம் தீயாக கரு நதிகள் துள்ளி விழ
ஆதவனும் சந்திரனும் ஆளில் ஆள் ஒழிய
போதனும அம்பிகை நடுங்கி அரனை அணைந்திடவே
நாதமும் ஒளியும் நடுநின்று பிழந்திடவே
வேதமும் பிரணவமும் வேறு வேறுகிடவே
பிழந்தது தூணே பிழந்த தூணிலிருந்து
பிழம்பாக நாரணனும் பிரகாசம் மிகச் சொலிக்க
வழமிக்க உருவமுடன் வாய் நிறைந்த எயிறுடனே
தழதழக்கும் நெருப்பெனவே தான் நரசிங்கமென
அவதாரஞ் செய்தே ஆங்கு நின்றிருந்த
தவமறியா இரணியனைத் தான் பிடித்து இரண்டாக
உவமானம் கூற ஏலா உருவமாய்த் தான் பிழந்து
நவமர்கக் கனைத்து நாடெங்கும் நடுங்கிடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்தாய் இன்றேடு அகம்பாவம் கொண்டோனே
இழிந்த மானுடனே இப்போதறி தெய்வமுண்டு
கழிந்த காலம் போக கவலைகொண்டு மேல் காலம்
தெழிந்த புத்தியுடன் தெய்வத்தை வணங்கு என
சிந்தை நொந்து இரணியனும் சிந்து கண்ணீர் சுரக்க
எந்தையே மாலே என் பிழை தான் பொறுத்து
உந்தன் கருணை உவந்தெனக்கும் தாருமையா
மைந்தன் பிழை பொறுத்து மன்னித்தருளுமென
கோபமும் வேகமும் கூடப் பெருந்தாபமும்
கொண்டமால் மோட்சம் கூட்டி அவற் கீந்து
சாபம் தவிர்த்து சகலருக்கும் ஆசி செய்து
பாவமகற்றிப் பழுதின்றி வாழ்வதற்கு
பரமனை துணை வேண்டும் பாரோர் அறிகவென
அரவுத் துயிலோன் அன்பு மிகப்பெருகி
மரபு முறை தவறு மன்னனாய் வாழ்கவென
சரமணிந்த பிரகலாதனைப் பெருந்தகைக்கு வரமீந்து
நரசிங்க முகத்துடனே நானிலத்தில் சினந்தணிய
அலைந்து திரிந்து அறமதனைக் காத்து நின்றார்
தொலைந்தது பீடையெனத் தூயவர்கள் துதிக்கலுற்றார்
கலைந்தது கார் இருள் என்று கண்ணன் புகழ் பாடலுற்றார்
இலை இனித்துன்பமென எல்லோரும் ஆடலுற்றார்

— வாழி —

செப்பு முத்தமிழ் தேன்சிந்து அம்மானை
இப்புயர்வின்றியே ஓங்கிடவே வாழி வாழி
இப்புவி எங்கணும் இறை நாமம் பரக்க
செப்பிடு நாமம் ஜெய ஜெயவென வாழியவே.

சுபம்.

MICROFILMED
Positive
Negative
Reel No. 1/65
8/11/
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No...................

This book is returnable on or before the last date stamped below.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

ழுகு.

ழியேல்.

பேசேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அடுத்த வெளியீடுகள்:-

1. கபோத காதை (உரை)
   (இலக்கியம்)
2. கதிர்காம சதகம் (உரை
   (அறநூல்)
3. கிழக்கிலங்கைப் புலவர் சரிதம்
   [ஆராய்வு நூல்]
4. மட்டக்களப்பின் கவின் கலைகள்
   (வரலாற்று நூல்)

விபரமான விலைப் பட்டியலுக்கு எழுதவும்.

275536

— :பதிப்பகம்;—

# ஜீவா பதிப்பகம்

பிரதான வீதி—தேற்றாத்தீவு

களுவாஞ்சிகுடி த.நி. (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org